www.padippakam.com

மே 2000 ☆ விலை ரூ.5

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2031 பெரியாராண்டு 121

## யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளிடம்




☆ தமிழுக்கு எதிரானவர்களைப் புறங்காண்போம்.

☆ ஆர்.எஸ்.எஸ். பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது.

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...




**தலையங்கம்**

☆ தமிழுக்கு எதிரானவர்களைப் புறங்காண்போம் 1

**துணைத் தலையங்கம்**

☆ ஆர்.எஸ்.எஸ். பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது — 5

**கட்டுரைகள்**

☆ கிளிண்டன் வந்தார் — வே. ஆனைமுத்து 7

☆ இந்திய ஆட்சிப் பணி பற்றிய ஒரு மதிப்பீடு — பொறிஞர் கு.ம.சுப்பிரமணியன் 17

☆ பொறியில் சிக்க வைக்கப்பட்ட எலிகள் — க.முகிலன் 21

☆ காஷ்மீர் சிக்கல் — வே.ஆனைமுத்து 27

**கவிதை**

☆ களத்தில் சந்திப்போம் — தமிழேந்தி



## சிந்தனையாளன்

(தமிழ் மாத இதழ்)

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 5 |
| ஓர் ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 |
| 5 ஆண்டுகளுக்கு 1.5.2000 முதல் | ரூ.250 |
| வாழ்நாள் கட்டணம் 1.5.2000 முதல் | ரூ.1000 |

இன்றே சந்தா செலுத்துங்கள்!

ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!!

*பணம், டி.டி. அனுப்பிட*

**'சிந்தனையாளன்'**

SINTHANAIYALAN

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம்

சென்னை-5. தொலைபேசி: 852 28 62


## நளினிக்குத் தண்டனை குறைப்பு

இராசிவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைக்கும்படித் தமிழர் நல அமைப்புகள் போராடின.

நளினிக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை மட்டும் வாழ்நாள் தண்டனையாகக் குறைத்துத் தமிழக ஆளுநர் 24.4.2000 அன்று ஆணை பிறப்பித்துள்ளார். இது தமிழர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகும்.

## இராணிப்பேட்டையில் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு

வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டையில் ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு 8.4.2000 அன்று தமிழ்க் குமரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பழ.நெடுமாறன், தியாகு, அற்புதம் குயில்தாசன், குமரத் தன்னொளியன், வாலாசா வல்லவன், பன்னீர்செல்வம், தமிழ்க்கனல், தமிழப்பன் ஆகியோர் உரையாற்றினர். மாநாட்டில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்றும், மாநில அரசுகளை தன் விருப்பம் போல் மத்திய அரசு கலைக்க வழிவகை செய்யும் அரசியல் சட்டத்தின் 356 பிரிவை நீக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

## சமதர்மக் காவலர்கள்



மார்க்சு லெனின் சிங்காரவேலர் பெரியார்

## சமூகநீதிக் காவலர்கள்



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா


# சிந்தனையாளன்

சுவடி : 22 மாத இதழ் ஏடு : 9


இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப் பட்ட சம உரிமை உடைய சமதர் மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

### கொள்கை முழக்கம்:

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்!
— மார்க்ஸ்-எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!
— லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!
— பெரியார்


ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

**ஆசிரியர் குழு**

வே. ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
புலவர் அஞ்சான்
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

சென்னை மே 2000

விலை ரூ.5/-


# தமிழுக்கு எதிரானவர்களைப் புறங்காண்போம்

தமிழ் நாட்டிலுள்ள மெட்ரிகுலேஷன் பள்ளிகளும், மழலையர் பள்ளிகளும் இப்போது எல்லாப் பாடங்களை யும் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கின்றன. இப்பள்ளிக ளில் 1 முதல் 5 வரை உள்ள வகுப்புகளில் இனிமேல் தமிழ் வழியில் தான் எல்லாப் பாடங்களும் கற்பிக்கப் பட வேண்டும் என்பது தமிழ்நாட்டு அரசின் ஆணை. இந்த அரசாணை செல்லாது என சென்னை உயர்நீதி மன்றம் 20-4-2000 அன்று தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பு தாய் மொழி வழியில் தான் தொடக்கக் கல்வி தரப்பட வேண்டும் என்ற கொள்கைக்குச் சாவு மணி அடித்து விட்டது.

இதனால் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட 100க்கு 85 பேராக உள்ள 5 கோடித் தமிழ் மக்களும் அவமானத்துக்கும் உரிமைப் பறிப்புக்கும் ஆளாக்கப் பட்டு விட்டார்கள் என்பது உண்மை. இது சிலரிடம் ஆத்திரத்தை உண்டு பண்ணிவிட்டது; சிலரிடம் மகிழ்ச்சி யையும் வெற்றிக் களிப்பையும் உண்டாக்கிவிட்டது.

இந்தத் தீர்ப்பை வெளியிட்ட மூவரைக் கொண்ட உயர்நீதி மன்ற பெஞ்சு என்ன காரணங்களை முன் வைத்திருக்கிறது என்பதைப் பற்றி நாம் ஆர அமரச் சிந்திக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



1. ஆங்கிலோ - இந்தியர் பள்ளிகளிலும், மய்ய அரசின் கீழ் உள்ள உயர் நிலை - மேல்நிலைப் பள்ளிகளிலும் (CBSE) 1 முதல் 5 வரை ஆங்கில மொழி வழியில் கற்பிக்கப்பட அரசு ஆணை இடந் தருகிறது; உரிமை அளித்திருக்கிறது. அதே அரசு மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் மட்டும் 1 முதல் 5 வகுப்பு வரை 'தமிழ் மொழியில்தான் பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது. இது குடிமக்களிடையே வேற்றுமை - பேதம் பாராட்டுவது ஆகும் என்று உயர்நீதி மன்றம் கூறிவிட்டது.

இப்படி உயர்நீதி மன்றம் கூறிட இடம் கொடுத்தது எது?

தமிழ் நாட்டில் 1 ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை தமிழ் மொழியில் தான் கற்பிக்கப்பட வேண்டும் என்கிற கொள்கை எல்லாவகைப் பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியானதாகத் தான் இருக்க வேண்டும். அரசு ஆணை இதற்கு எதிரானது. எனவே செல்லாது என்று கூறிவிட்டது.

இது குடிமக்களின் அடிப்படை உரிமையைப் பாதுகாக்கிற அரசியல் சட்ட விதி 14க்கு எதிரானது என்றும் நீதிமன்றம் கூறிவிட்டது.

இதில் நீதிமன்றம் காணத் தவறியது என்ன?

ஆங்கிலோ - இந்தியர்கள் ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். அவர்கள் தங்களின் தாய்மொழியான ஆங்கிலத்தில்தான் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையில் படிக்க வேண்டும்; அதே நேரத்தில் தமிழ் மாநில அரசின் கல்வி மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இருக்கிற தமிழை ஒரு பாடமாகப் படிக்க வேண்டும். 6 ஆம் வகுப்புக்குப் பிறகு தமிழில்தான் எல்லாப் பாடங்களையும் அவர்கள் படிக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்க வேண்டும். 6 ஆம் வகுப்புக்குப் பிறகு ஆங்கில வழியில் தான் படிக்க வேண்டும் என்று மாணவர்கள் விரும்பினால், அப்போது, தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாட்டு அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். மொழிச் சிறுபான்மையினருக்கு அரசு வழங்க வேண்டிய் உரிமை இவ்வளவு தான்.

அதே முறையிலான மொழிக் கொள்கையைத்தான் மய்ய அரசின் கீழ்வரும் உயர் நிலை - மேல்நிலைப் பள்ளிகளும் (CBSE) பின்பற்ற வேண்டும் என்று தமிழ் நாட்டு அரசு ஆணை பிறப்பித்திருக்க வேண்டும்.

இந்த இரண்டு வகைப் பள்ளிகளும் 1 முதல் எல்லா வகுப்புக் கல்வியையும் ஆங்கிலத்தில் தருவதற்கு உரிமை அளித்து ஏற்கெனவே தமிழ்நாட்டு அரசு பிறப்பித்த ஆணையை அரசே இரத்துச் செய்திருக்க வேண்டும். தமிழ் நாட்டு அரசு இதைச் செய்யவில்லை. அப்படிச் செய்யாமலேயே, மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் மழலையர் பள்ளிகளிலும் தமிழ் வழியில்தான் 5 ஆம் வகுப்பு வரை கற்பிக்க வேண்டும் என்று ஆணையிட்டது வேற்றுமை பாராட்டுகிற ஓர் ஆணையே யாகும்.

எனவே அரசு என்ன செய் வேண்டும்? எல்லா வகையான பள்ளிகளிலும் தாய் மொழி மூலம் அல்லது தமிழ்மொழி மூலம் மட்டுமே 5 ஆம் வகுப்பு வரையில் கல்வி கற்பிக்கப்படும் என்கிற ஒரே தன்மையிலான ஆணையை அரசு உடனே பிறப்பிக்க வேண்டும். இது அவசரமானது. இதற்கு ஏற்ப ஒரு சட்டத்தை இயற்றுவது மிகவும் அவசியமானது.

தாய்மொழி மூலம் 5 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கிற உரிமை மொழிச் சிறுபான்மையினரான ஆங்கிலோ இந்தியர், தெலுங்கர், உருது பேசுவோர் ஆகியோருக்கு இதன் மூலம் வழங்கப்பட்டு விடும். தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட எல்லோரும் எந்த வகைப் பள்ளியில் படித்தாலும் தாய் மொழியான தமிழ் வழியில் தான் படிக்க வேண்டும் என்கிற உரிமை எல்லாக் குடிமக்களுக்கும் சமமான தன்மையில் இதன் மூலம் நிலை நாட்டப்படும்.

தமிழ் ஆர்வலர்களும், கல்வியாளர்களும், ஆசிரியப் பெருமக்களும், பெற்றோர்களும், மாணவர்களும் அறிவு வழிப்பட்டு இந்த நிலைமைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

எந்த அரசியல் சட்ட விதி 14 என்பதைக் கூறி, ''அரசு ஆணை குடி மக்களிடையே வேற்றுமை பாராட்டுகிறது; எனவே இது செல்லாது'' என்று உயர்நீதிமன்றம் கூறியதோ, அதே அரசியல் சட்டத்தின் விதி 350 - அ (350 A) இதைத்தான் கூறியுள்ளது என்பதை நீதிமன்றம் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இதை அனைவரும் உணர வேண்டும்.

இந்த விதி, 'மொழிச் சிறுபான்மையினர்க்கு அவரவர் தாய்மொழியில்தான் தொடக்

படிப்பகம்

www.padippakam.com



கக் கல்வி தரப்பட வேண்டும்; இதற்கு ஒவ்வொரு மாநில அரசும், உள்ளூர் அதிகார நிறுவனமும் ஆவன செய்ய வேண்டும்' என்றே திட்ட வட்டமாகக் கூறுகிறது.

100க்கு 15 பேர் தமிழ் நாட்டில் மொழிச் சிறுபான்மையினர். 100க்கு 85 பேர் தமிழ்நாட்டில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர்.

மொழிச் சிறுபான்மையினர் அவரவர் தாய் மொழி மூலம் மட்டுமே தொடக்கக் கல்வி பெற உரிமை தருகிற 350 - அ என்கிற அதே சட்ட விதி, தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட எல்லோரும் - 85 விழுக்காட்டுப் பேரும் எந்த வகையான பள்ளியில் படித்தாலும் தமிழ் மூலம் மட்டுமே தொடக்கக் கல்வியைப் பெற வேண்டும் என்கிற உரிமையை அரசு எப்படி மறுக்க முடியும்? நீதிமன்றம் இதை எப்படி மறுக்க முடியும்?

**350-A (Facilities for instruction in mother-tongue at primary stage. —** It shall be the endeavour of every State and of every local authority within the State to provide adequate facilities for instruction in the mother-tongue at the primary stage of education to children belonging to linguistic minority groups; and the President may issue such directions to any State as he considers necessary or proper for securing the provision of such facilities).

ஆனால், தமிழ்நாட்டு உயர்நீதி மன்றம் விதி 14 என்பதையும் விதி 162 என்பதையும் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. அதனால்தான் அதன் அடிப்படையில் இவர்கள் அளித்த தீர்ப்பு ஒட்டு மொத்தத் தமிழர்களுக்கும் எதிரானதாக - உரிமை பறிப்புத் தீர்ப்பாக அமைந்து விட்டது.

உயர்நீதி மன்ற முழு பெஞ்சு, அரசியல் சட்ட விதிகள் 14, 162, 350 - அ இவற்றை ஒரு சேர ஆய்வு செய்து நியாயம் வழங்கியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது கண்டனத்துக்கு உரியது.

2. அடுத்து, 'கல்வி பெறும் உரிமை ஒவ்வொரு குடிமகனும் பெற்றுள்ள அடிப்படை உரிமை. அந்தக் கல்வியை எந்த மொழி மூலம் பெற வேண்டும் என்கிற உரிமையும் ஒரு குடிமகனுக்கு உள்ள அடிப்படை உரிமையாகும். தம் தம் குழந்தைகள் எந்த மொழி மூலம் கல்வி பெற வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கிற உரிமையும் பெற்றோர்களுக்கு உள்ள அடிப்படை உரிமை ஆகும்' என்று உயர்நீதி மன்றம் கூறியுள்ளது. இது வெறும் பிதற்றலே ஆகும்.

அடிப்படை உரிமை என்றால் என்ன?

அடிப்படை உரிமை என்பது ஒவ்வொரு குடிமகனும் நல்ல, கவுரவமான மனிதனாக வாழ வேண்டப்படுகிற எல்லா உரிமைகளையும் பெற்றவனாக வாழ அரசினால் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது தான்.

அப்படிப்பட்ட உரிமைகளை அளிப்பது அரசே; அவற்றைப் பாதுகாப்பதும் அரசே.

நல்ல, கவுரமான குடிமகனாக வாழ்வது என்றால் என்ன? ஒருவன் பிறந்த இடம், அவனுடைய சொந்த மரபு, சொந்தத் தாய் மொழி, சொந்தப் பண்பாடு இவற்றைத் தங்கு தடை இல்லாமல் பெற உரிமை பெற்றிருப்பது தான்.

தமிழ் நாட்டில் பிறந்த தமிழன் தமிழ் மரபு, தமிழ் பண்பாடு இவற்றைப் பெற்றுப் பாதுகாத்துக் கொள்ள உதவுகிற முதலாவது கருவி அவனுடைய தாய்மொழியான தமிழ்தான்; தமிழ் மட்டுமேதான். 'தமிழ் வேண்டாம்' என்று புறக்கணிக்கிற ஒரு தமிழன் மூடனாக இருந்து தான் அப்படிப் புறக்கணிக்கிறான்.

இன்று நகர்ப்புறங்களில் உள்ள - ஆங்கில வழிக் கல்வியை விரும்புகிற படித்தவர்களும், அலுவலர்களும், செல்வந்தர்களும், கல்வியை வணிகப் பொருளாக ஆக்கிவிட்டவர்களும் - எந்த வகுப்பைச் சார்ந்திருந்தாலும், உண்மையில் தம் தம் அடிப்படை உரிமையை உணராத மூடர்களும் கீழ் மக்களுமே ஆவார்கள். ஏன்?

தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி, உயர் தொழில் நுட்பக் கல்வி வரையில் அவரவர் தாய் மொழியில் கற்றதனால்தான் சப்பானியர், செர்மானியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் மட்டுமே பெரிதும் எல்லா அறிவியல் கண்டுபிடிப்புகளையும் கண்டுபிடித்தவர்கள்; தொழில் நுட்பத்தைப் பெருக்கியவர்கள்; வணிகத்தையும் இணையத் தொடர்பையும் வளர்த்தவர்கள் என உருவாகியிருக்கிறார்கள்.

எதனால்?

தாய்ப்பால் சத்துள்ளது; நோய் எதிர்ப்புத் தன்மை உள்ளது. அது போலவே தாய்மொழி வழியிலான

படிப்பகம்

www.padippakam.com



கல்வி மட்டுமே ஒருவனைச் சுதந்தரச் சிந்தனையாள னாக - அறிவு வளம் பெற்றவனாக ஆக்கும் தகுதியும் திறமையும் வாய்ப்பும் உள்ளது. இதை உலகிலுள்ள மற்றெல்லா நாட்டினரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள மற்ற மொழி மாநிலத்தவர் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் மானங்கெட்ட தமிழ்நாட்டான் மட்டுமே இதை உணர மறுக்கிறான்.

தமிழ் நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த - இருக்கிற திராவிடக் கட்சியினர்க்கும், மற்ற வாக்கு வேட்டைக் கட்சிக்காரர்கள், கல்வி அமைச்சர்கள், கல்வித் துறை அலுவலர்கள், இந்திய ஆட்சிப் பணியாளர்கள், கல்வியாளர்கள் என்கிற மரமண்டைகளுக்கும் இது புரிய வேண்டும்; இது உறைக்க வேண்டும். இவர்களில் பலருக்கு இது புரிந்தாலும் உறைக்கவில்லை.

இவர்களில் எவரும் கை சுத்தமானவர்கள் அல்ல என்பது நூற்றுக்கு நூறு உண்மை. இவர்கள்தான், முதலில், தாய்மொழி வழிக் கல்வி, தமிழ் மொழி வழியே அனைத்துக் கல்வி என்கிற கொள்கைக்கு நூற்றுக்கு நூறுமாகத் தங்களை ஆட்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்தகைய நிலையில், தமிழ் நாட்டு அரசு உடனே செய்ய வேண்டியது என்ன?

1. எந்த ஒரு கல்வி நிறுவனமும், பள்ளியும் அரசு அனுமதி இன்றித் தொடங்கப்படக் கூடாது என்றும், அப்படித் தொடங்கப்படுவது தண்டனைக்குரிய குற்றம் ஆகும் என்றும் சட்டம் இயற்றி அதைச் சரிவர நடைமுறைப் படுத்த வேண்டும்.

2. பயிற்று மொழி என்பது தொடக்கக் கல்வியில் அவரவர் தாய்மொழியில் தான் என்பதை - தமிழ் நாட்டில் தமிழில்தான் என்பதை எல்லாவகைப் பள்ளிகளுக்கும் பொருந்தக்கூடிய த்ன்மையில், ஒரே வடிவிலான ஆணையைப் பிறப்பிக்க வேண்டும். ஏற்கெனவே இதற்கு மாறாகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் உண்மையில் பேதம் பாராட்டுபவை. அப்படிப்பட்ட ஆணைகளை அரசு - குறிப்பாகக் கல்வித் துறையினர் உடனே இரத்துச் செய்ய வேண்டும்.

இவற்றுக்குச் சட்ட வடிவம் தந்து அரசாணைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

இந்தியாவிலுள்ள உச்ச நீதிமன்றமோ, 18 உயர்நீதிமன்றங்களோ மக்களை மக்களாகக் கருதி நீதி வழங்கும் என்று எவர் கருதினாலும் அது ஒரு மூடத்தனமே ஆகும்.

இந்திய உயர் நீதித் துறை இலஞ்சம், மது, மாது, சாதிச் செல்வாக்கு, அரசியல் செல்வாக்கு இவற்றுக்கு இரையாகி 50 ஆண்டுக்கு மேலாகி விட்டது. எதனால்? உயர்நீதித் துறை என்பது இன்றளவும் மேல் சாதி - நிலப்பிரபுத்துவ - பார்ப்பன - மற்றும்பார்ப்பனியப் புத்திக்கு ஆளான கேடர்களின் ஆதிக்கத்திலிருப்பது. அதனால் தான் அப்படி உள்ளது.

''பார்ப்பான் நீதிபதியாய் இருக்கும் நாடு கடும்புலி வாழும் காடே ஆகும். நாங்கள் புலி வேட்டை ஆடுகிறோம்....'' என்று சென்னை உயர்நீதி மன்றத்தில், 1957 இல், தந்தை பெரியார் ஓங்கி முழங்கினார். அந்தத் தன்மையிலிருந்து - பார்ப்பனியப் பிடிப்பிலிருந்து இன்று நீதித் துறை விடுபட்டு விட்டதா? இல்லை. விடுபடாது.

அது அப்படி விடுபட வேண்டுமானால், நாம் மக்கள் மன்றத்துக்குத் தான் போக வேண்டும். நம் மக்களில் பெரும்பாலோர் நல்ல கல்வி பெறாதவர்கள்.

ஆங்கில மொழிப் பாடம் **(English as a subject)** என்கிற ஒன்றில் தேறாததால் மட்டுமே இன்றும் பத்தாவது வகுப்போடு படிப்பை இடையில் நிறுத்தி விடுகிறவர்கள் யார்?

பட்டிக்காடுகளில் வாழ்கிற ஏழையான தாழ்த்தப் பட்டோரும், பிற்படுத்தப் பட்டோரும் மட்டுமே..

ஆங்கில வழியில் உயர் கல்வி பெறுவது, இன்னமும் ஒரு மலை ஏறுகிற முயற்சியாக இருப்பது யாருக்கு?

நாட்டுப்புற ஊர்களில் உள்ள ஏழை வேளாண்மைக்காரர்கள், வேளாண்மைக் கூலிகளான தாழ்த்தப் பட்டோருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும் தான்.

இவர்கள் மொத்த மக்கள் தொகையில் 100க்கு 90 பேர் ஆவர்.

நகர்ப்புறங்களில் உள்ள தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு அலுவலர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள் தங்களை மேல் சாதி - மேல் தட்டு என்று பொய்யாகக் கருதிக் கொண்டிருக்கிற பேதைகள். எனவே ஆங்கில வழிக் கல்வியை அவர்களில் பலர் விரும்புகிறார்கள்.

இவ்வளவு இடர்ப்பாடுகளையும் தாண்டித் தான், தமிழ் - தமிழ் வழிக் கல்விக் கொள்கை வெற்றி வாகை சூட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ் வழிக் கல்வி மறுக்கப்படுவதால் எதிர்கால வாழ்க்கையை இழக்கப் போகிறவர்கள் மேல்நிலை - உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இன்று 'படிக்கிற நம் பேரர்களும், பேத்திகளும். இவர்களைப் படுகுழியில் தள்ளப் போவது ஆங்கில வழிக்கல்வி. இதற்குத் துணை போவது தமிழ் நாட்டு அரசு, நீதித்துறை, கல்வி வணிகர்கள் கூட்டம், பார்ப்பனக் கும்பல் என்பதை இன்றே இப்போதே ஊர்தோறும் தெருத் தோறும் சென்று நாம் முழங்கிட வேண்டும்.

பல நூறாயிரக் கணக்கான மாணவர்களும், தொடக்கப்பள்ளி உயர்நிலைப் பள்ளி - மேல்நிலைப்பள்ளி - கல்லூரி ஆசிரியர்களும் தெருவுக்குத் திரண்டுவந்து போராட நாம் வழிகாண வேண்டும்.

இந்தியாவில் உள்ள நீதி மன்றம் நீதி வழங்காது; சட்டம் என்கிற பேரைச் சொல்லி அநீதியையே அது வழங்கும்.

பெரியார் மொழியில் சொன்னால், ''இந்திய கோர்ட், ஒரு சட்ட கோர்ட்; இது நியாய கோர்ட் அல்ல'' என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

இதே பெரியார், ஆங்கிலம் வேண்டும்; அது வீட்டு மொழியாகக் கூட இருக்க வேண்டும் என்று எழுதியதையும் பேசியதையும் ஆங்கிலவழிக் கல்விக்கு ஆதரவாக இழுத்துக் கட்டுரைகள் எழுதுகிற பார்ப்பனர்களும், பார்ப்பனத்திகளும், பேச்சாளர்களும், மற்ற எழுத்து வணிகர்களும், கல்விப் பெருவணிகக் கொள்ளைக்காரர் கி.வீரமணியும் - இந்திய நீதித்துறையைப் பற்றிப் பெரியார் சொன்ன கருத்தையும் அதே போல் ஏற்றுக் கூறுவார்களா?

ஆங்கிலம் வேண்டும் என்று எந்தச் சூழ்நிலையில் பெரியார் கூறியிருந்தாலும், அது வீட்டு மொழியாகவும் வர வேண்டும் என்று அவர் கூறியது கொஞ்சமும் பொருத்தம் அற்றதே ஆகும். பெரியாரைப் போன்று, எவர் இப்படிக் கூறினாலும் அது எப்போதும் பிழைபட்டதே ஆகும்.

உரிமைக்குப் போராடுகிறவன் அக்கிரமமான அரசை - நியாயம் வழங்காத கோர்ட்டை - நியாயத்துக்கு எதிராகப் பேசுகிற தலைவர்களை, அமைப்புகளை, கட்சிகளை நேருக்கு நேராக நின்று எதிர்த்துப் போராட வேண்டும்.

'போராட்டம், தாங்க முடியாத இழப்புகளை நமக்குத் தரும்' என்பதை உணர்ந்து நாம் போராட முன்வரவேண்டும். தமிழுக்கு எதிரான எல்லா எதிரிகளையும் புறங்காண இது ஒன்றே வழி.

1-5-2000 வே. ஆனைமுத்து

துணைத் தலையங்கம்

# ஆர்.எஸ்.எஸ். பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது

இந்திய அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்யப் போவதாக மய்ய அரசு அறிவித்தது. அதற்கென உச்சநீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி எம்.என். வெங்கடாசலய்யா தலைமையில் ''அரசமைப்புச் சட்ட மறு ஆய்வுக் குழு'' ஒன்றையும் அமைத்தது.

இப்படி ஒரு குழுவை அமைப்பதும், அரசமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்யப் போவதாகச் சொல்லுவதும் பா.ச.க. அரசின் தீய உள் நோக்கத்தைச் செயல்படுத்துவதற்குத்தான் என்பதை நாம் ''சிந்தனையாளன்'' ஏட்டில் 2000 மார்ச்சு இதழில் தெளிவாகவே குறிப்பிட்டிருந்தோம்.

நாம் குறிப்பிட்டிருந்த - அந்த முதலாவது தீய நோக்கம் என்ன?

''தேர்ந்தெடுக்கப்பட்ட' நாடாளுமன்றம் முழுமையாக அயந்தாண்டுகளும் பதவியில் நீடித்து இருக்கக் கூடிய வகையில் ஒரு சட்டத் திருத்தத்தை முன் வைப்பது; இயன்றால் நாடாளுமன்ற ஆயுள் காலத்தை ஆறு ஆண்டுகளாக நீட்டிப்பது''

படிப்பகம்

www.padippakam.com



''இது இவர்களின் ஏற்பாட்டில் ஒளிந்திருக்கிற கமுக்கமான ஓர் எண்ணம்'' என்பதை - நாம் தெளிவாகக் குறிப்பிட்டோம்.

இன்று இது உண்மையாக ஆகப் போகிறது.

''நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பு வரை மக்களவை நீடிப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பது தேவையற்றது. எனினும் இப்பிரச்னை குறித்து குழு விவாதிக்கும்'' என, 22-4-2000 அன்று, சட்டமறு ஆய்வுக் குழுவின் உறுப்பினர் நீதிபதி பி.பி. ஜீவன் ரெட்டி தில்லியில் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

இது, இந்தக் கருத்துக்கு ஆதரவு தேடுவதற்காக வேண்டி, திட்டமிட்டு - வேண்டும் என்றே வெளியிடப்பட்டதாகும். இது தீய நோக்கம் கொண்டதாகும்.

பாரதிய சனதாவின் உள் எண்ணங்களை - ஆர்.எஸ்.எஸ்.இன் இலட்சியங்களை இன்றைய நாடாளுமன்றம் இருக்கிற போதே முழுமையாக நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதே பா.ச.க. தலைமையிலான அரசின் இரகசியத் திட்டம்; கமுக்கமான எண்ணம்.

இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று வந்த ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும் எப்படியாவது 5 ஆண்டுகளும் பதவி வகிக்க வேண்டும்; கை நிறைய சம்பாதிக்க வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை உள்ளவர்கள்.

தேசிய மக்கள் நாயக அணியின் உறுப்புக் கட்சிகளில் எதுவும் இதை எதிர்க்காது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ, இடதுசாரிக் கட்சிக்காரர்களோ கூட இதை எதிர்க்க மாட்டார்கள்.

ஏனெனில் 5 ஆண்டுகளும் - முடிந்தால் 6 ஆண்டுகள் கூடப் பதவியில் நீடிப்பது, அதன் மூலம் கொள்ளையடிப்பது என்பதில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாகவே நிற்கும்; இதை வரவேற்கும்.

அயோத்தியில் உடனே இராமர் கோயிலைக் கட்டுவது; பசுவை வெட்டுவதைத் தடை செய்வது; மதமாற்ற தடைச் சட்டம் செய்வது; காஷ்மீருக்கு உள்ள தனி உரிமையை ஒழிப்பது; பெயரளவுக்கு இப்போது இருக்கிற 'மதச் சார்பின்மை' என்பதை நீக்கிவிட்டு - 'இந்துத்வா என்பதே அனைத்து இந்தியரின் கலாசாரம்' என்று வரையறை செய்வது; இந்தியாவின் வரலாற்றை மாற்றி - 'ஆரியர் இந்தியாவின் ஆதிக் குடிகள்' என்பதை நிலை நாட்டுவது என்கிற ஆர்.எஸ்.எசின் கொள்கைகளை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள, இன்று கிடைத்திருக்கிற பொன்னான வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு வெற்றி பெறுவதே அரசமைப்புச் சட்ட மறு ஆய்வுக்குழு அமைக்கப்பட்டதன் முதலாவது நோக்கம். இவற்றையும் நாம் தெளிவாகவே மார்ச்சு இதழில் குறிப்பிட்டுள்ளோம்.

'கமுக்கம்' என்று நாம் கருதியது - உண்மையில் இனி வெளிப்படையாகவே நடக்கப் போகிறது. பா.ச.க.வின் சிந்தனைப் போக்கை சட்ட மறு ஆய்வுக்குழு மூலம் அரசு வெளியிட்டு விட்டது. பதுங்கியிருந்த ஆர்.எஸ்.எஸ். பூனைக் குட்டி இப்போது வெளியே வந்து விட்டது என்பதை இதன் மூலம் நாம் தெளிவாக அறிதல் வேண்டும்.

"ஸ்திரத்தன்மை" - "அரசின் நிலைத்த தன்மை" யைக் காப்பாற்றுவது என்பது, அரசமைப்பின் அடிக்கட்டுமானத்தை மாற்றுவது ஆகாது என்று, இப்போதே, இக் குழுவினரால் ஒரு கூடுதல் விளக்கம் கூறப்பட்டுவிட்டது. இது மிக மிக ஆபத்தானது; வெகு மக்களால் புரிந்து கொள்ளப்பட முடியாதது.

இவற்றை நாம் மிகக் கடுமையாகவே எதிர்க்க வேண்டும்.

★ ☆ ★

## நா. வேங்கடதாஸ் மறைந்தார்

ஓய்வு பெற்ற ஆசிரியரும், சிறந்த இசை அறிஞரும், வீரானந்தபுரம் ந. கணபதியின் மைத்துனரும், வே. ஆனைமுத்துவின் உடன் பயின்ற தோழருமான குடந்தை நா. வேங்கடதாஸ் (இராமகிருஷ்ணன்) தம் 73 ஆம் அகவையில் 15-4-2000 அன்று மறைவுற்றார் என்பதை அறிந்து வருந்துகிறோம். அன்னாரின் துணைவியார், தம்பி, மக்கள் நால்வர், உடன் பிறந்த தமக்கை - தங்கைகள் க. கோமளவல்லி, க. சீத்தா, க. கிருஷ்ணவேணி, அரங்கநாயகி, ஆசிரியர் ந. கணபதி மற்றும் உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

— மா.பெ.பொ.க.

படிப்பகம்

www.padippakam.com



இன்று மே நாள்!

# கிளிண்டன் வந்தார்!



ஓர் அய்ம்பது ஆண்டுகளுக்கு முன் தெருக் கூத்துகள் எல்லா ஊர்களிலும் தவறாமல் நடத்தப்படுவதைத் தமிழ்நாட்டில் பார்த்திருக்கிறோம்.

இராசாதிராச, இராச மார்த்தாண்ட, இராச கம்பீர, சகல கலா வல்லவரான சக்ராதிபதியானவர் - இரச கத துரக பதாதிகளுடன் வருகிறார்... வருகிறார்... என்று கட்டியங்காரன் நெடு நேரம் அறிவிப்பான். தூங்கி வழிந்த கிழடுகளும் குஞ்சுகளும் கூட எழுந்து உட்கார்ந்து, கண்ணை அகல விரித்துக் கொண்டு பார்ப்பார்கள்.

படைகள் புடை சூழ மன்னர் வருவார்.

'மந்திரி! மாதம் மும்மாரி மழை பொழிகிறதா?' என்பான் அரசன்.

'பொழிகிறது அரசே' என்பான் மந்திரி.

இரண்டு பேரும் அரண்மனைக்கு வெளியே போகாத குருடர்கள்; திருடர்கள்.

அடுத்து, உடனே, 'மந்திரி! அவாள் அவாள் சாதி தர்மங்களை அவாள் அவாள் தவறாமல் செய்கிறார்களா?' என்பான் அரசன்.

'அப்படியே செய்கிறார்கள் மன்னவா!' என்பான் மந்திரி.

இந்தியாவில், ஏறக்குறைய கடந்த பத்து நூற்றாண்டுகளாக இதுதான் அரச தருமமாகவும், நாட்டு நடப்பாகவும் இருந்து வருகிறது. இதில் துளியும் மாற்றம் இல்லை.

இன்று மழை பொய்த்து விட்டது. உயர் அதிகாரிகள், அமைச்சர்கள், வனத்துறை ஊழியர்கள், மரவணிகர்கள், காலிகள், கூலிகள் எல்லோரும் சேர்ந்து காடுகளை அழித்து, மழை வருவதைத் தடுத்து வைத்திருக்கிறார்கள். இனி மாதம் ஒரு தடவை கூட மழை வராது. மாரிக்காலத்திலேயே போதிய மழை பெய்யாது.

ஆனால் சாதி தருமம் மட்டும் இந்தியாவில் இன்றும் அப்படியே இருக்கிறது. இலங்கை மலேசியா சிங்கப்பூர் ஆப்பிரிக்காவில் - இந்து சூத்திரர்கள் அதிகம் உள்ள நாடுகளில், சாதி ஓரளவு அடி வாங்கியிருக்கிறது.

ஆனால், தொழில் நுட்ப வல்லுநர்கள், மருத்துவர்கள், பொறிஞர்கள், உலக நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் என்கிற பேரால் அமெரிக்காவிலும், கனடாவிலும் இங்கிலாந்திலும் குடியேறியிருக்கிற ''இந்தியர்களில்'' 75% பேர் பச்சைப் பார்ப்பனர்கள். இவர்கள் அங்கேயும் கோயில்களைக் கட்டி, வேத விற்பன்னர்களை அங்கேயும் அழைத்துக் கொண்டு போய் வருண தர்மத்தைக் காப்பாற்றுகிறார்கள்; திரை மறைவில் பார்ப்பனத்திகளுக்கு அது... அது (!) பறி போய்க் கொண்டிருக்கிறது.

அமெரிக்க அதிபர் கிளிண்டன் ஒரு பெண் விரும்பி - காமாந்தகன் என்று அமெரிக்காவே தண்டோரா போட்டது. இது உலகமே அறிந்த ஒன்று. ஆனால், ''இது அந்த நாட்டுப் பண்பாடு'' என்று கூறி உலகமே அதை ஒதுக்கி விட்டது.

'அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் அமெரிக்கா கையொப்பம் போடவேண்டும்' என்று, கிளிண்டன் அரசு ஒரு தீர்மானத்தை முன் வைத்தது. ஆனால் அமெரிக்க நாடாளுமன்றம் (காங்கிரஸ்) அதை ஏற்க மறுத்துவிட்டது. அமெரிக்க நாடாளுமன்றம் ஏற்க மறுத்து விட்ட அதையே இந்தியா ஏற்க வேண்டுமாம் - எல்லா அணு ஆயுத வலிமை பெற்ற நாடுகளும் ஏற்க வேண்டுமாம். அமெரிக்கா செய்கிற அடாவடித் தனம் இது! எந்த ஒரு நாடும் அணு ஆயுதம் செய்வதும், வைத்திருப்பதும், வெடித்துப் பார்ப்

படிப்பகம்

www.padippakam.com



பதும் மானிடத்துக்குக் கேடானது. இதுவே உண்மை.

1990க்குப் பிறகு, கடந்த பத்து ஆண்டு களாக, அமெரிக்காவுக்கு ஈடு கொடுக்க - அமெரிக்காவை எதிர்த்துப் பேச வலிமையான ஓர் அரசு உலகில் இல்லை. 1989இல் சோவியத்து வீழத் தொடங்கிய பிறகு, உலக அரங்கில், ஒரே சண்டியராக - அடியாளாக இருப்பது அமெரிக் காதான்.

அமெரிக்காவில், மிக விரைவில் குடி அரசுத் தலைவர் தேர்தல் நடைபெற உள்ளது. நாளைக்கு வீட்டுக்குப் போகப் போகிற கிளிண் டன் இந்தியாவுக்குப் பயணம் வருகிறார் என் பதை இந்தியா முழுவதிலும், எல்லா வழிகளி லும், பரபரப்பாக விளம்பரம் செய்து விட்டார் கள். அரசும் செய்தது; தனியார் ஏடுகளும், தொலைக்காட்சிகளும் விளம்பரம் செய்தன.

இந்தியாவில் கிளிண்டன் பங்கேற்கத் திட்ட மிட்ட நிகழ்ச்சிகள் எங்கெங்கே நடக்குமோ அங்கெல்லாம், அமெரிக்கக் காவல் துறையே முன்கூட்டி வந்து சோதனைகளைச் செய்து பார்த்தது.

அமெரிக்காவிலுள்ள கிளிண்டனுக்கு இந் தியா பற்றிய ஒரு கருத்துப் படத்தை முன்கூட் டியே அங்கேயே விளக்கமாகக் காட்டி விட வேண்டும்.

அதற்காக, இந்திய செய்தித் துறை எடுத் துள்ள "இந்தியப் பாரம்பரிய வரலாறு - 5555" (India's Heritage 5555) என்கிற செய்திப் படத் தைப் போட்டு, கிளிண்டனைப் பார்க்க வைத்தார் கள். அந்தப் படம், "இந்தியா ஒரு புனித பூமி - ஞானிகள் வாழ்ந்த நாடு - ஒரு வேதபுரி" என்பதைக் காட்டுகிற படம். "வேதங்களிலேயே அணு ஆயுதம், இயற்பியல் பற்றியெல்லாம் இருக்கின்றன" என்பதை உணர்த்துவது. அதே போல் '555', '55', '5' என்றும் இந்திய அரசு பல படங்களை எடுத்துள்ளது.

கிளிண்டனின் மனத்திரையில் இந்தியா எப்படிப்பட்ட நாடு என்பதை முன்கூட்டியே சாமர்த்தியமாகப் பதிய வைத்து விட்டார்கள், தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள்.

எல்லாப் படிப்புத் தகுதிகளும் வாய்ந்த கேரளத்தைச் சார்ந்த ஒரு ஃபாதர் அலெக்சாண் டர் குரியன் (38) என்பவர், 1998 நவம்பரில் அமெரிக்காவில் ஒரு பெரிய அரசு வேலையில் சேர்ந்தார். அமெரிக்காவுக்கென 100 உலக நாடுக ளில் உள்ள 167 தூதுவர் அலுவலகங்கள், துணைத் தூதுவர் அலுவலங்களைக் கண்காணிப் பது அவருடைய பொறுப்பு. அவர்தான் அதிபர் கிளிண்டனும் அவருடைய 300 கடற்படை, மற்றும் 2000 மெய்க்காவல் படையினரும் புது தில்லியில் மௌரியா ஷெரடான் ஹோட்டலில் தங்க ஏற்பாடு செய்தவர்; அதேபோல் மும்பை யில் ஒபிராய் ஹோட்டலில் தங்கவும் ஏற்பாடு செய்தவர். இந்த குரியன் உலகம் சுற்றும் அமெரிக்க அமைச்சர் மெட்லின் ஆல் பிரைட் அம்மையாரால் பதவிக்குத் தெரிந்தெடுக்கப் பட் டவர்.

ஏற்கெனவே 1978 இல் அன்றைய அமெரிக் கக் குடி அரசுத் தலைவர் ஜிம்மி கார்ட்டர் இங்கு வந்தார். அப்போது அமெரிக்கா ஏக உச்ச அதிகாரம் படைத்த நாடாக இல்லை; மேலும் இந்திய - சோவியத்து நட்புறவு வலிமையாக இருந்தது. கார்டர் வந்தார் - நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் பேசினார் - திரும்பிப் போனார்., அவ்வளவுதான்.

இன்று, சோவியத்து நாடு தலை குப்புறக் கவிழ்ந்து விட்ட பிறகு, உலகத்தின் ஒரே வல்லரசாக - அடியாளாக - உலகை ஆட்டிப் படைக்கும் அரசாக அமெரிக்கா விளங்குகிறது.

இந்தியாவில் குடி அரசுத் தலைவர் மாளிகை, நாடாளுமன்ற மய்ய மண்டபம் - அதன் சுற்றுப்புறம், ஜெய்ப்பூர் முன்னாள் அரசர் மாளிகை எங்கும் சிவப்புக் கம்பளங்களும் பச்சைக் கம்பளங்களும் புதியவையாக விரிக்கப் பட்டுக் கோலாகலமாக கிளிண்டனுக்கு வர வேற்புகள் வழங்கப்பட்டன.

கிளிண்டன் இந்தியாவுக்குள் வருவதற்கும், காஷ்மீரில் சித்சிங்புராவில் 20-3-2000 அன்று அப்பாவி சீக்கியர்கள் 36 பேர் சுட்டுக் கொல்லப் படுவதற்கும் சரியாக இருந்தது. ஏன், இது, இப்படி நடந்தது?

வரப்போகிற அமெரிக்க நாடாளுமன்றத் தேர்தலில் நியூயார்க் தொகுதியில் கிளிண்டனின் மனைவி ஹில்லாரி போட்டியிடப் போகிறார். நியூயார்க்கில் சீக்கியர்கள் அதிக எண்ணிக்கை

படிப்பகம்

www.padippakam.com



யில் உள்ளனர்; ஹில்லாரியின் தேர்தல் நிதிக்கு அவர்கள் பணத்தை வாரி வழங்கப் போகிறார் கள்; தேர்தல் பிரசார வேலையிலும் சீக்கியர்கள் பொறுப்பேற்கப் போகிறார்கள். கிளிண்டனின் உடன் வந்தகுழுவில் ஒரு சீக்கியப் பெருமுதலா ளியான செஹால் என்பவரும் வந்திருந்தார்.

இந்த நேரத்தில், ''பாக்கிஸ்தானிய இஸ்லாமிய பயங்கரவாதிகள் சீக்கியர்களைக் கொன்றுவிட்டார்கள்'' என்கிற ஒரு பீதியைக் கிளப்பிவிட, இந்திய இந்து மதவாதிகள் ஏற்பாடு செய்த திட்டமிட்ட படுகொலையே இது. எப்படி?

சித்சிங்புராவில் சீக்கியரைக் கொன்ற பயங் கரவாதிகள் பஞ்சலத்ரான் என்கிற ஊரில் மசூதி யில் ஒளிந்து கொண்டிருப்பதாகச் சொல்லி, மார்ச்சு 24-25இல் அய்ந்து பேர்களைச் சுட்டுக் கொன்றார்கள்.

அப்படிக் கொல்லப்பட்டவர்கள் உண்மை யில் பாகிஸ்தானிய பயங்கர வாதிகளா? இல்லை.

அனந்தாங் என்கிற ஊரைச் சேர்ந்தவர் களைத்தான் - அய்ந்து இஸ்லாமியர்களைத்தான் இந்திய ஆயுதப்படை சுட்டுக் கொன்றுள்ளது. இதை அனந்தாங் உள்ளூர் வாசிகள் கண்டு பிடித்து விட்டார்கள்; புதைக்கப்பட்ட அய்ந்து பிணங்களையும் தோண்டியெடுத்துப் பரிசோ தனை செய்யச் சொன்னார்கள். பரிசோதனை செய்திட காஷ்மீர் முதல்வர் ஷேக் அப்துல்லா ஆணையிட்டார். இது கூட இந்திய பா.ச.க அரசுக்குப் பிடிக்கவில்லை.

தோண்டப்பட்ட பிணங்கள் பெரிய ஜுமா கான் (65), ஸகூர் அகமத் தலால், பஷீர் ஏ.பட், முகமது யூசுஃப் மாலிக், இளைய ஜுமா கான் ஆகிய 5 பேருடையவை தான் என்று உள்ளூர் மக்களே அடையாளம் காட்டி விட்டார்கள்.

'இந்தியப் படையால் வேட்டையாடப்பட் டவர்கள் பாகிஸ்தானிய பயங்கரவாதிகள் அல் ல' என்பது இப்போது இதனால் வெளியாகிவிட் டது.

அப்படியானால் 36 சீக்கியர்களைக் கொன்ற வர்கள் யார்?

சீக்கியர்களை' அன்று கொன்றவர்கள்: 'ஜெய்ராம்!' 'ஜெய் பாரத்!' 'இது தான் எங்களுக்கு ஹோலி!' என்று ஓங்கி முழக்கம் இட்டுவிட்டே அங்கிருந்து ஓடி மறைந்திருக்கிறார்கள்.

இது திட்டமிட்டு பாகிஸ்தானியர் பேரில் பொய்யான பழி சுமத்திட, இந்துமத வெறியர் கள் செய்திட்ட சூதான ஏற்பாடு என்பது வெளிப்படை.

'36 சீக்கியர்கள் இஸ்லாமியர்களால் கொல் லப்பட்டார்கள்' என்ற ஓர் எண்ணத்தை கிளிண் டனுக்கு உண்டாக்க இவர்கள் இப்படிச் செய்த னர்.

கிளிண்டனின் வருகையை எதிர்த்துப் பல இடங்களில் பேரணிகள் நடந்தன.

இடது சாரிக் கட்சிகள் பல ஊர்களில் 'கிளிண்டனே திரும்பிப் போ!' என வெற்றி கரமான பேரணிகளை நடத்தினர். ஈழவிடுதலை ஆதரவு அணியினரும், தேசிய இன விடுதலை அமைப்பினரும் பல இடங்களில் கிளிண்டனின் வருகையை எதிர்த்துப் பேரணி நடத்தினர்; இவர்கள் கைது செய்யப்பட்டு விடுதலை செய் யப் பெற்றனர்.

1980 இல் போபாலில் உள்ள அமெரிக்கத் தொழிற்சாலையிலிருந்து கசிந்த நச்சு வாயுவி னால் பல்லாயிரம் பேர் செத்தனர்; பல இலக்கம் பேர் நிரந்தரமான நோய்க்கு ஆளாகி அவர்களின் அடுத்த தலைமுறையையும் நோய் பீடித்துக் கொண்டது. இக்குடும்பங்களுக்கு உரிய இழப் பீடு இன்றுவரை தரப்படவில்லை. அமெரிக்க முதலாளிகள் இந்திய அதிகாரிகளையும் அரசி யல் கட்சிக் காரர்களையும் விலைக்கு வாங்கி விட்டனர்; அத்துடன் அமெரிக்க நீதிமன்றத் துக்கு வழக்கை மாற்றி அது நடைபெறாமலே இழுத்தடிக்கிறார்கள்.

இத்தகைய பாதிப்புகளுக்கு ஆளான இலட் சக்கணக்கான மக்கள் போபாலில், திரண்டு 'கிளிண்டனே திரும்பிப் போ!' என முழங்கினர்.

இவற்றையெல்லாம் இந்திய அரசு மறைத்து விட்டது; இந்திய ஏடுகளும் இருட்ட டிப்புச் செய்துவிட்டன. இந்தச் சூழ்நிலையில் தான், கிளிண்டனின் நாடாளுமன்ற உரை 35 மணித்துளிகள் நீடித்தது.

படிப்பகம்

www.padippakam.com



இந்திய நடாளுமன்றக் கூட்டுக் கூட்டம் எப்போதும் மய்ய மண்டபத்தில் தான் நடக்கும். அங்குலம் அங்குலமாக அந்த மய்ய மண்டபம் அமெரிக்கரால் முன் கூட்டியே சோதனை செய்து பார்க்கப்பட்டது. அமெரிக்க ஒலிபெருக்கிச் சாதனத்தையே மய்ய மண்டபத்தில் அமைத்துவிட்டனர்.

காந்தியாரின் அகிம்சைக் கொள்கைக்குப் பாராட்டு; 36 சீக்கியர்கள் கொல்லப்பட்டதற்கு அநுதாபம்; இந்திய - அமெரிக்க நாடுகளிடையே ஆன வணிக மற்றும் தொழில் உறவை பலப்படுத்தும் ஒப்பந்தங்கள் இவற்றைப் பற்றிக் கவர்ச்சியாகவே கிளிண்டன் பேசினார். அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (CTBT) இந்தியா கையொப்பம் போட வேண்டும் என்பதையும் வற்புறுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருசேர எழுந்து நின்று ஆரவாரம் செய்து (Standing ovation) கிளிண்டனின் பேச்சை வரவேற்றனர்.

முன்னதாகக் குடி அரசுத் துணைத் தலைவர் கிருஷ்ண காந்த் ஆங்கிலத்தில் வரவேற்புரை ஆற்றினார். பிரதமர் வாஜ்பேயி இந்தியில் உரை நிகழ்த்திட, அது ஆங்கிலத்தில் உடனடியாகப் பெயர்க்கப்பட, அதை கிளிண்டன் அறிந்து கொள்ள முடிந்தது. ஆங்கிலமும், இந்தியும் தெரியாதவர்கள் பாடு அவமானகரமானது. அவைத்தலைவர் பால யோகி உப்புச்சப்பு இல்லாத ஓர் உரையை நிகழ்த்தினார்.

நாடாளுமன்ற மய்யக் கூடமே கலகலப்பாக இருந்தது.

நம்மூரில் தேர்த் திருவிழாவில் தேரில் போகிற உற்சவ மூர்த்தியைப் பார்க்க பக்தர்கள் முண்டியடித்துக் கொண்டு ஓடுவார்கள். நம்மூர் நாடாளுமன்றத்திலும் இதுதான் அன்று நடந்தது. 770 நாடாளுமன்ற உறுப்பினர்களில் இடது சாரிக் கட்சிகளின் உறுப்பினர்கள் 50 பேர் போக, மீதியுள்ள 720 பேரும் ஒருவர் மேல் ஒருவர் மோதி, முண்டி அடித்துக் கொண்டு, கிளிண்டனுடன் கை குலுக்க ஓடினார்கள். கிளிண்டனுக்கு இது புதிதாக இருந்திருக்கும்; அதே நேரத்தில் நம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முதிர்ச்சியை (!)ப் புரிந்து கொள்ளவும் இது உதவியிருக்கும். ''எந்த ஒன்றிலும் ஒழுங்கு - வரிசை முறை இல்லாதவர்கள் இந்தியர்கள்'' என்பதை நம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - அன்று செம்மறிகளைப் போல் திரண்ட நிகழ்ச்சியே, உணர்த்தும்.

கிளிண்டன் ஆக்ராவில் தாஜ்மகாலைப் பார்த்தது ஒருபேறு என்று அவரே கருதினார். அய்தராபாத்தில் சந்திரபாபு நாயுடுவைப் புகழ்ந்தார் - அய்தராபாத் ஒரு சைபெராபாத் (Cyberabad) - ''கணினி - இணையமய நகரம்'' ஆகிவிட்டதாகப் புகழ்ந்தார்; ராதம்போரில் விலங்குகள் காப்பகத்தில் புலிகளை நேரில் பார்த்து மகிழ்ந்தார். இராசஸ்தானில் நைலா என்கிற சிறு நகரில் பெண்களே நடத்தும் கூட்டுறவு நிறுவனங்கள் - ஊராட்சி நிறுவனம் இவற்றைப் பற்றி அறிந்து அப்பெண்களோடு கலந்து நடனம் ஆடினார்; மும்பையில் வணிக - தொழில் அதிபர்களைக் கண்டு அளவளாவினார் - இளந் தொழில் முனைவோரிடம் உட்பட.

பொதுவில் இந்திய அரசியல் வாதிகள், அதிகார வர்க்கத்தினர், பொதுமக்கள் இவர்களின் உண்மையான - பக்குவம் இல்லாத நிலைமைகளை அவர் உணர்ந்ததோடு கூட, வணிக ஒப்பந்தங்களை நிறைவேற்றிக் கொள்ளுவதில்தான் கிளிண்டனும் அவரோடு வந்த குழுவினர்களும் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

அந்நிய நாடுகளில் முதலீடு செய்வதற்கான அமெரிக்க நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே மிகத் துல்லியமாகவே செய்திருந்தது.

அமெரிக்கா ஏற்கெனவே 1996 இல் 180 கோடி டாலர்; 1998-99 இல் 400 கோடி டாலர் என இந்தியாவில் முதலீடு செய்துள்ளது. கி.பி. 2003க்குள் மேலும் 460 கோடி டாலரை முதலீடு செய்ய உள்ளது.

இந்தியாவில் என்னென்ன தொழில்களைத் தொடங்கலாம் எனத் திட்டமிட்டு ஆய்வு செய்து, குறிப்பிட்ட 83 விதமான தொழில்களில் 13,200 கோடி ரூபாயை முதலீடு செய்ய அமெரிக்கா ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது'; 'ஆதாயம் இல்லாத செட்டி ஆற்றைக் கட்டி ஊற்றை

படிப்பகம்

www.padippakam.com



இறைக்க மாட்டான்' என்கிற நம் தமிழ் முதுரைகளின் பொருள் இதுதான்.

இந்தியாவின் பழம் பெருமை - காந்தியாரின் அகிம்சைக் கொள்கை இவற்றை அமெரிக்கர் பாராட்டுவது என்பதும்; இந்திய அரசியல் வாதிகள், ஆட்சியாளர்கள், அதிகார வர்க்கத்தினர், நூறாண்டு காலமாக நடத்தப்படுகிற பத்திரிகைகளின் உரிமையாளர்கள் எல்லோரும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சுரண்டு களம் ஆவதை மறைத்து விட்டுப் புகழ்பாடுவதும், வரவேற்பதும் எதற்காக என்பதும் நம் அனைவர்க்கும் புரிய வேண்டும்.

அயல்நாட்டு அறிவியல் கண்டுபிடிப்புகளை வரவேற்பதும்; அதே நேரத்தில் அந்நிய முதலீட்டை நம் கட்டுக்குள் வைக்கிற தன்மையும் கட்டாயம் நமக்குத் தேவை. ஆனால் இன்று இது இப்படி இல்லை.

உள் நாட்டுக் கறுப்புப் பணம்; உள் நாட்டு வெள்ளைப் பணம்; உள் நாட்டில் தனியாரிடம் உள்ள தங்கம்; உள்நாட்டில் மத நிறுவனங்களிடம் உள்ள தங்கம், வைரம், பணம்; உள் நாட்டில் தண்டப்படாமல் நிலுவையில் இருக்கிற இலட்சக்கணக்கான கோடி ரூபாய் வருமான வரி மற்றும் வங்கிக் கடன்கள் இவையெல்லாம் இந்தியாவில் எத்தனைப் பெரிய தொழில்களையும் நிறுவுவதற்கும் நடத்துவதற்கும் போதுமானவை.

ஓர் அய்ந்தாண்டுகளுக்கு - ஒருவருக்கும் - ஒரு காசு வரிகூடப் போடாமல் இந்தியா எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றக் கூடிய அளவுக்கு - அவ்வளவு செல்வம் இப்படி இங்கே முடங்கிக் கிடக்கிறது. யாரிடம்? ஒரு பத்து விழுக்காடு பேராக இருக்கிற 10 கோடி இந்தியர்களிடம். இவர்கள் இந்துக்களாக - சமணர்களாக - பார்சிகளாக - சீக்கியர்களாக - இஸ்லாமியர்களாக இருக்கிற மேல் சாதி - மேல் வர்க்கத்தினர்.

இப்படி உள்ளவர்களின் நலன்களைக் காத்திட முதலில் உதவுவது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்; இரண்டாவது உயர் அதிகார வர்க்கம்; மூன்றாவது உச்ச மற்றும் உயர் நீதி மன்றங்கள்; நான்காவது அரசியல் வாதிகள்; அய்ந்தாவது தனியார் ஏடுகள்.

இவ்வளவு பாதுகாப்புடன் இருக்கிற இந்த 10 கோடிப் பேரின் தலைவர்களாக இருக்கிற தொழிலதிபர்கள், வணிகர்கள், நில உடைமையாளர்கள், அரசியல் வாதிகள் இந்தியாவை அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும், கொரியாவுக்கும் அடகு வைத்து, இங்குள்ள ஏழைகளான - 80 கோடிப் பேர்களாக உள்ள கீழ்ச்சாதி; கீழ்த்தட்டு மக்களின் உடல் உழைப்பை, மூளை உழைப்பை மலிவாகவே சுரண்டி, அந்த அயல் நாட்டுக்காரர்களைப் பணக்காரர்களாக ஆக்கவும், இங்குள்ள இவர்கள் தரகர்களாக இருந்து கோடானுபதிகளாக ஆகவுமே இவ்வளவு ஏற்பாடுகளும் நடக்கின்றன. இதுவே உண்மை.

இன்று கிளிண்டன் அமெரிக்க அதிபர்.

நாளை வேறொருவர் அமெரிக்க அதிபர் ஆவார். ஆனால் உலகத்தில் சமதர்மம் ஓங்காமல் ஒழிக்கப்பட வேண்டும் என, 1945 இல் உறுதி பூண்ட அமெரிக்காவில் ஆளுங் கட்சி மாறுவதால் - ஆளும் தலைவர்கள் மாறுவதால் அவர்களின் கொள்கை ஒரு துளி கூட மாறவே மாறாது.

உலக வளங்களைப் பெரிய அளவில் சுரண்டி, 25 கோடி அமெரிக்கர்களில் 24 கோடிப் பேர்களை வளம் கொழிக்கிற வாழ்வுக்கு உரியவர்களாக ஆக்கி வைப்பது ஒன்றே அமெரிக்கரின் குறிக்கோள். கிளிண்டனின் இந்திய வருகை இதைத்தான் சாதித்தது.

இதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இது நம் "மே நாள் புரிதல்" ஆகட்டும்.

1-5-2000 வே. ஆனைமுத்து

## பெரியார் தமிழ்ப் பேரவை பொற்காசுப் பேருரை

பெரியார் தமிழ்ப் பேரவையின் சார்பில் *26-4-2000* அன்று 'எழுச்சி தலித் முரசு' ஆசிரியர் பெ. சந்திரகேசன் அவர்களின் பொற்காசுப் பேருரை நிகழ்ச்சி, சென்னையில் கலைஞர் கருணாநிதி நகர் தலித் முரசு அலுவலகத்தில் சிறப்புடன் நடைபெற்றது. சந்திரகேசன் அவர்களுக்குப் பேரவையின் அமைப்பாளர் சங்கமித்ரா ரூ.*1000* அளித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



# சங்கமித்ரா விடையளிக்கிறார்



? வைத்தீஸ்வரன் என்று ஒரு கவிஞர் இருக்கிறாராமே, தெரியுமா?
*கா. வள்ளி, தூத்துக்குடி*

○ என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்? பார்ப்பன நண்டு, சிண்டு, நத்தான் கூடு எல்லாத்துக்கும் கவிஞர் என்றால் வைத்தீஸ்வரன் தான். தமிழ்-தமிழன் மேம்பாட்டுக்கு வைத்தீஸ்வரன் என்ன கிழித்தார் ஏன்று மட்டும் கேட்டு விடாதீர்கள்

**? எப்ப கார்டூன் போட்டாலும் லாலுபிரசாத் யாதவை இந்து பத்திரிகை மாட்டுடன் போடு வது ஏன்?**
*அப்துல் ரகீம், எளங்குடி*

○ மாடு பார்ப்பனர்களின் மூதாதையர்களின் சொத்து. அதை வைத்துக் கொண்டு லாலு மேலே வருவதைப் பார்ப்பனர்கள் எப்படிச் சகிக்க முடியும்? அது ஒரு பக்கம். உடனடி உண்மைக் காரணம் - லாலு ஒரு இடையர் என்பதைச் சுட்டிக் காட்டத்தான். இன்னொரு இடையனான - கோபா லன் [கோ-மாடு; பாலன்-பராமரிக்கிறவன்] ஆயி ரக் கணக்கான பாப்பாத்திகளைப் பெண்டாண்டது பற்றிப் பார்ப்பனர்களுக்கு வெட்கம் மானம் இல்லை.

**? ஆனந்த விகடன், கல்கி பத்திரிகைகள் - பெரியார் கொள்கைக்கு ஜன்மப் பகைவர்கள் போல் நடப்பது ஏன்?**
*மு. ஏழுமலை, விழுப்புரம்*

○ உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது பார்ப்பனர்கள் கற்ற முதல் பிழைப்புத் தந்திரம். குடி அரசுப் பத்திரிகைக்கு விளம்பரம் சேர்ப்பவராக ஆனந்த விகடன் வாசனும், புரூப் திருத்தும் ஆபீஸ் பையனாக கல்கி கிருஷ்ண மூர்த்தியும் அன்று வாழ்க்கையைத் தொடங்கியவர்கள் தான்.

**? சிவசங்கரி ஞான பீடப் பரிசுக்குப் பரிந்து ரைக்கப்பட்டராமே?**
*பா. எழிலரசி, கரந்தை*

○ பீடமா, பீடையா?

**? இந்திய சென்சார் குழுவினருக்கு சென் சார் செய்யத் தெரியவில்லை என்று சேகர் கபூர் சொல்லியிருக்கிறாரே?**
*சு. வரலட்சுமி, திண்டுக்கல்*

○ க்வீன் எலிஸபெத், பேண்டிட் குவீன் - என்று உலகத்தரமான படங்களை எடுத்தவர் சேகர் கபூர். அவரிடமே இந்த சாம்பார் தேசத்துச் சவுண்டி கள் தமது சில்லரைத் தணங்களைக் காட்டினால் அவர் வேறு எப்படிச் சொல்வார்?

**? ஞானி, ஞாநி - எதற்குப் பெயர் குழப் பம்? புனை பெயருக்குக் கூடவா பஞ்சம்?**
*சே. அபுல்கலாம், புதுவை*

○ இப்போது சங்கமித்திரையும் வந்திருக்கி றார். இருக்கட்டுமே - பத்து கிருஷ்ணன், எட்டு ராமன் இருக்கிற மாதிரி!

**? திருப்பரங்குன்றம் அனைத்து மகளிர் காவல் நிலையம் காதல் திருமணங்களை நடத்த வைப்பதில் ஒரு சாதனை படைத்து விட்டதாமே?**
*ப. அனுராதா, மதுரை - 16*

○ இனி காதல் பிரச்சினை இளைஞர்கள் திருப்பரங்குன்றம் வந்து விடலாம். நம் நாட்டைப் பிடித்த கேடே இதுதான் - வக்கீல் படிப்புக்காரர் ஆண்மை மருந்து விற்கிறார்; டாக்டர் படிப்போடு அரசியல் நடக்கிறது; போலீஸ் ஸ்டேஷன் கல்யா ணத் தரகு வேலை செய்கிறது. மொத்தத்தில் படிப்புக்கேற்ற பதவியும் இல்லை; பதவிக்கு ஏற்ற கடமையும் இல்லை.

**? பெரியார் இருக்கும்போது கடவுள் இல்லை என்கிற பிரச்சினை - அது இப்போது எடுபடாது என்று ரஜினிகாந்த் பேசியுள்ளது பற்றி உங்கள் கருத்து என்ன?**

படிப்பகம்

www.padippakam.com



*கு. செல்வராஜ், அரக்கோணம்*

○ அவர் சொல்வது உண்மைதானே! வெள்ளை உதட்டில் கருப்புமை பூசி சிகரட்டைத் தூக்கிப் போட்டுக் கவ்வும் அற்புதமான நடிப்புக்கு ரூபாய் ஒரு கோடி சம்பளம் தர மானம் கெட்ட தமிழன் – பட முதலாளிகள் தயாராய் இருக்கும் போது – பெரியார் கூற்று எப்படி எடுபடும்? தலைவர் பதவி அவருக்குத்தான் என்கிறார் மூப்பனார். அருணாச்சலம் படத்துக்குப் பிடி விருது என்கிறார் கருணாநிதி. சோவும் – சின்னக்குத்தூசியும்தான் இங்கு தமிழ் ஜெர்னலிச ஜாம்பவான்கள். அப்படி இருக்க – ரஜனி அய்யா சொல்றது உண்மை தாங்க!

**? வங்கி வரலாற்றில் பெரிய மோசடி கோபால கிருஷ்ணன் காலத்து இந்தியன் பேங்கு மோசடிதான்னு சொல்லலாமா?**

*ஆ. மாசிலாமணி, மதுராந்தகம்*

○ ஏன் – நமசிவாயம் காலத்து அய்.ஓ.பி. மோசடி; ரூஸ்வெல்ட் காலத்து சின்டிகேட் பேங்க் மோசடி; மார்க்கபந்து காலத்து – யூகோ பேங்கு மோசடி – வரிசையாகப் பார்ப்பனப் பத்திரிகைகள் டமாரம் அடிக்கும் சூத்திர அதிகாரி மோசடிகள் இருக்கின்றனவே! இந்த நாட்டில் ஊழல் என்று பிள்ளையார் சுழி போட்டவர். டி.டி. கிருஷ்ணமாச்சாரி – முந்திரா ஊழலில். நரசிம்மராவ் காலத்து பங்குச் சந்தை ஊழலில் மொத்த இழப்பு ரூ.5 இலட்சம் கோடி; இதில் ஸ்டேட் பேங்கு மட்டும் இழந்தது ரூ.1200 கோடி. பார்ப்பான் எம்.டி – சேர்மனாய் இருந்த – இருக்கிற மத்திய அரசு நிறுவனங்கள் எல்லாம் 20 ஆண்டுகளுக்குப் பிறகு இழப்பில் நடக்கின்றன. ரிசர்வ் பேங்கு வெங்கிட ரமணனோ – அய்சிஅய்சிஅய் – வகுலாபரணனோ ஊழல் குற்றச் சாட்டில் மாட்டுகிறார்களா? ஒரே ஒரு பார்ப்பான் மாட்டி தண்டனை பெற்றதுண்டா? சூத்திரன் மேல் பதவிக்கு வந்தால் மட்டும் எமர்ஜன்சியில் முட்டியில் தட்டுவான் (நமசிவாயம்), சி.பி.அய்யில் மாட்டுவான் (ரூஸ் வெல்ட், மார்க்கபந்து). எல்லாம் நடக்கும் – பார்ப்பன ஆட்சியில்

**? ஆந்திராவில் தமிழ் வருடப் பிறப்புக்கு விடுமுறை இல்லை. கேரளாவில் தெலுங்கு வருடப் பிறப்புக்கு விடுமுறை கிடையாது. தமிழ்நாட்டில் மட்டும் ஏன் தெலுங்கு வருடப் பிறப்புக்கு விடுமுறை?**

*பா. தணிகாசலம், வேலூர்–2*

○ ஓகோ! குணாவைப் படிச்சுப்புட்டு இப்படி குதர்க்கமா கேக்குறீங்களா? காமாட்சி நாயுடு, வைகோ, ஆர்க்காடு வீராசாமி, கே.என். நேரு – இவர்களின் சதி ஒன்றும் இல்லிங்க.

கருணாநிதி ஆந்திராவிலிருந்து ஓடிவந்தவர்னு எம்.ஜி.ஆர். சொன்னதையும் உட்டுடுங்க.

தியாகய்யர் உருகி உருகித் தெலுங்கில் பாடினதை – பார்ப்பனர்கள் தெருத் தெருவா ஊர் ஊராகப் பாடி தமிழ் வளர்த்ததும் மறந்துடுங்கோ. கிருஷ்ணதேவராயன், ராணி மங்கம்மா, வீரபாண்டியக் கட்டபொம்மன் என்று கன்னியாகுமரி வரை தெலுங்கு ஆட்சி நடந்தது போனால் போகட்டும். குலோத்துங்க சோழன் – ஆந்திராவில் வாழ்க்கைப் பட்ட சோழனின் மகள் வயிற்றுப்பேரன் என்கிறது வேண்டாம். இன்னா சமாச்சாரம்னா —

★ மதராஸ் மனதேன்னு போராடின தெலுங்கர்கள் இன்னமும் மன ‘மதராசிலேதானே உண்டுன்னாரு’
★ சென்னை கார்ப்பரேஷன் வீட்டுவரி – நிலவரி – வாகன வரி கட்டுகிறவர்களில் பாதிக்கு மேல் தெலுங்கர்கள்
★ அய்ந்து முதலமைச்சர்களைத் தமிழ் மண்ணுக்கு வழங்கிய சினிமாத்துறை 70 சதவீதம் வரை தெலுங்கர்கள் கையில் தான்
★ புதுவை ரெட்டியார்கள் – ஆர்க்காடு நாயுடுகள் – திருநெல்வேலி கம்மாவார்கள் என்று இன்னமும் தமிழக அரசியல் லகான் – தெலுங்கர்கள் கையில் தான்!

**? உங்கள் நண்பர் சிவகாமி அய்.ஏ.எஸ். அரசியலுக்கு வருவார்னு ஒரு பேச்சு இருந்ததே – என்ன ஆச்சு?**

*கு. ஜெயப்பிரகாஷ், காரைக்கால்*

○ குழந்தை குட்டின்னு இருக்கிறதாலே – நாணயமான அரசியலுக்குக் கொஞ்சம் சேமிப்பு தேவைன்னு – ஜப்பானில் போய் உழைத்துக் கொண்டிருக்கிறார். அவர் வருவதற்குள் தலித் அரசியல் தமிழ்நாட்டில் நெருங்க முடியாத அளவுக்கு நாற்றமடைந்துவிடும் போலிருக்கே.

**? முத்தில் ஆனைமுத்து என்று கூடவா இருக்கிறது?**

*மா. பாலன், காட்டுமன்னார்குடி*

படிப்பகம்

www.padippakam.com



○ கெடுத்தீர்கள் கதையை. ஆனைத் தந்தத்தில் உருவாகும் அற்புதமான முத்துக்கு ஆனை முத்து என்று பெயராம். சொல்லாய்வறிஞர் அருளியிடம் கேளுங்கள் [ஆதாரம்: தமிழருவி- 18.8.99]

**? லாலு யாதவ் வருவாய்க்கு மேல் சொத்துச் சேர்த்தது உண்மையா இருக்குமா?**
***மா. அருட்கலை, சேலம்***

○ பார்ப்பனர்களின் பூர்வீகக் கட்சி காங்கிரஸ்; இன்றைய கட்சி - பி.ஜே.பி. பார்ப்பனர்களின் பூர்வீகத் தொழில் உஞ்சவிருத்தி - அதாவது பிச்சை எடுக்கிறது. இன்று காங்கிரஸ் கட்சியின் சொத்து எவ்வளவு? காங்கிரஸ் பிரமுகர்களின் சொத்துக்கள் எவ்வளவு? பிஜேபியின் சொத்து - பிஜேபி தலைவர்களின் சொத்துக் கணக்கு என்ன? ராமர்பிள்ளையை மிரட்டுவதானாலும், லாலுயாதவை ஜெயிலில் அடைப்பதானாலும் - அவர்கள் பார்ப்பனர்களாய் இல்லை என்கிற ஒரு காரணம் தான். எம்.எஸ். சுவாமிநாதன் என்கிற ஒரு பார்ப்பனருக்கு - விவசாய விஞ்ஞானி என்று பட்டம் கொடுத்து - விருது, விருது, விருது என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன விவசாயத்தில், என்ன ஆராய்ச்சியை, எங்கே செய்தார்? எந்த விஞ்ஞானக் குழு அதை ஆய்வு செய்தது? சி.பி.அய் - அவருடைய ஆராய்ச்சிகளைக் கேள்வி கேட்டு வழக்குத் தொடர்ந்ததா? மூச்! பார்ப்பான் டமாரம் அடித்தால் சூத்திரன் பத்து டமாரம் அடித்துக் கொண்டு பின்னாலே போவான் - அதுதானே இந்த நாட்டுக் கதை?

**? அரசியலால் மக்களுக்கு என்ன பிரயோசனம்?**
***ரா. மணிமேகலை, நாகப்பட்டினம்***

○ ஏன் இல்லாமல்? ஒரு பீ.ஏ-வான மு.க.ஸ்டாலின் இன்று ஆயிரம் எம்.ஏ-க்களுக்கு மேலே உட்கார்ந்திருக்கிறார். பள்ளியிறுதிப் படிப்பு கூடத் தேறாத இந்திரா காந்தி - இந்தியாவின் அனைத்து IAS - IPS - MA - Ph.D. காரர்களும் சலாம் போட வாழ்ந்தார். இந்த ஆயிரமாண்டின் சிறந்த பெண்மணி என்று கூட சொல்லியிருக்கிறார்களே! ஆங்கிலத்தில் உரையாடத் தெரிந்த செயலலிதா பல எம்.ஏ.க்கள் தலையில் மிளகாய் அரைக்கிறார். உங்களுக்கும் எனக்கும் வேண்டுமானால் பிரயோசனம் இல்லாமல் இருக்கலாம்.

## திருவள்ளுவர் மழலையர் பள்ளி

சென்னை திருவான்மியூர் பெரியார் திருவள்ளுவர் மழலையர் பள்ளியின் ஒன்பதாவது ஆண்டு விழா *14-4-2000* அன்று மாலை 6 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது.

## சிபி நகலகம் திறப்பு விழா

சென்னைப் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வி வளாகத்தில், சிபி நகலகத் திறப்பு விழா *10.4.2000* திங்கள் காலை 11 மணிக்கு வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் நகலகத்தைத் தொடக்கி வைத்தார். சிபி நகலக உரிமையாளர் கோ. இளவழகன் அனைவரையும் வரவேற்றார்.

## தமிழக இளைஞர்களின் எதிர்காலம்: கருத்தரங்கம்

*15.4.2000* சனிக்கிழமை மாலை 5 மணிக்கு காஞ்சிபுரம் பாக்கியம் எல்லப்பன் திருமணக் கூடத்தில் இரா. வெங்கடேசன் தலைமையில், தமிழக இளைஞர்களின் எதிர்காலம் என்பது பற்றிக் கருத்தரங்கம் நடைபெற்றது. அரசியல் துறையில் என்பது பற்றி அ. பத்மநாபன்; பண்பாட்டுத் துறையில் என்பது பற்றி வாலாசா வல்லவன், விவசாயத் துறையில் என்பது பற்றி ச. யோகநாதன், தொழில் வேலை வாய்ப்பில் என்பது பற்றி இரா. பாலசுப்பிரமணியம் கருத்துரை வழங்கினர். கு. ஏகாம்பரம், கடலூர் கம்பர், பாரதிவிஜயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இரவு 10 மணிக்குக் கருத்தரங்கம் நிறைவுற்றது.

[illegible]

படிப்பகம்

www.padippakam.com



# மலேசியா தமிழ்ச் சான்றோர்கள் தமிழகம் வருகை

*30.3.2000* (வியாழன்) மாலை 5.55-க்கு வைகை தொடர் வண்டியில் மலேசியா தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் மு. மணி வெள்ளையன், மலேசியா தமிழ் நெறிக் கழகத் தலைவர் இரா. திருமாளவளன் ஸ்ரீ என்கிற முகிலன், இராம. மாணிக்கம், கன்னல் மணி யன், மு. தமிழ்வாணன், முனியாண்டி என்கிற மா. இளமுருகு, பழ. வீரன், இராசா என்கிற மு. தமிழரசன், கருப்பையா என்கிற அருளரசு திருச்சிராப்பள்ளிக்கு வருகை தந்தனர். திருச்சி தொடர் வண்டி சந்திப்பில் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் திருச்சி மாவட்ட அமைப்பாளர் ச.வே. சுப்பிரமணியன் தலைமையில் டி.பி.கே. செயராசு, உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் வேணுராசன், புலவர் ஆ.வே. இராமசாமி, முனைவர். த. கோடப்பிள்ளை, திருக்குறள் சண்முகம், திருக்குறள் இராதா வரவேற்று, தங்கும் விடுதிக்கு அழைத்துச் சென்றனர்.

*31.03.2000* (வெள்ளி) துறையூர் வட்டம், வைரிசெட்டிப்பாளையம் திருக்குறள் பேரவை ஆண்டு விழாவில் மலேசியத் தமிழ் அன்பர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். பெரும்புலவர் இரா. இளங்குமரனார் சிறப்புரை யாற்றினார். முனைவர். த. 'கோடப்பிள்ளை, திருக்குறள் சண்முகம், இராமலிங்கம் முத் தமிழ்ப் பண்ணை விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

*01.04.2000* (காரி) ச.வே. சுப்பிரமணியன், சென்னை பி. தினகரன், மலேசியா தமிழ் நெறிக் கழகத் தேசியத் தலைவர் இரா. திருமாவளவன் தலைமையில் குழுவினர், பாடாலூர் பெரியார் குடிலைப் பார்வையிட்டனர். பள்ளியின் தாளாளர் மல்லிகா முத்துசாமி, விடுதிக் காப்பாளர் இராமலிங்கம் குழுவினரை வரவேற்றனர். மலேசியா தமிழப் பண்பாட்டு இயக்கமும், தமிழ் நெறிக் கழகமும் முறையே ரூ.500/- வீதமும், ச.வே. சுப்பிரமணியன் ரூ.101/-ம் பெரியார் குடிலுக்கு நன்கொடை அளித்தனர். பின்னர் சாத்தனூர் கிராமத்தில் உள்ள தொல்பொருள் ஆய்வில் உலகளாவிய சிறப்பானதும், வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான கல் மரம் - "FOSSIL TREE" பார்வையிடப்பட்டது.

இரவு 7.45-க்கு திருவரங்கம் செண்பகத் தமிழ் அரங்கில் மலேசியத் தமிழர்களை வர வேற்றுச் சிறப்பித்தனர். புலவர் சேது மாணிக்கம் தலைமை ஏற்றார். முனைவர் த. கோடப் பிள்ளை வரவேற்பும், அறிமுக உரையும் ஆற்றினார். செண்பகத் தமிழ் அரங்கு நிறுவனர் இராசவேலு தொடக்க உரை நல்க, மலேசியத் தமிழப் பண்பாட்டு இயக்க இராம: மாணிக்கம், தமிழ் நெறிக் கழக தேசியத் தலைவர் இரா. திருமாவளவன், பழ. வீரன் ஏற்புரையாற்றினர். சிறப்பு விருந்தினர்கள் மற்றும் ச.வே. சுப்பிரமணியன் ஆகியோருக்கு செண்பகத் தமிழ் அரங்கு சார்பில் பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தனர்.

*02.04.200* (ஞாயிறு) முற்பகல் 10.30-க்கு திருச்சிராப்பள்ளி திருக்குறள் பேரவை சார்பில் வரவேற்பு நிகழ்ச்சி. திருக்குறள் சண்முகம், பொறியாளர் தலைவர் பாலகங்காதரன், திருக்குறள் இராதா, பொறியாளர் சேக்தாவூத், வழக்கறிஞர் சிவசங்கரன், இலங்கையன், குழந்தை ஈகவரசன் கலந்து கொண்டனர். ●

## கர்நாடகத்தில் நடந்த காட்டுமிராண்டிச் செயல்

கர்நாடக மாநிலத்தில் பிடார் மாவட்டத்தில் உள்ள அலிகெர் கிராமத்தில் வாழ்ந்து வந்த பால்ராஜ் என்ற பப்புலி என்னும் ஐந்து வயது இளஞ் சிறுவனை வீடு கட்டும் முதலாளி ஒருவர் அவ்வீட்டிற்கு பார்ப்பனியச் சடங்கிற்காக அக்குழந்தையை நரபலி தந்திருக்கிறார். ஆடு, மாடுகளை வெட்டி வீழ்த்துவது போல் சிறுவனின் கை, கால்களை வெட்டியிருக்கிறார்கள். இத்தகைய காட்டு மிராண்டிச் செயலை இந்திய மக்கள் யாவரும் ஒன்றாக இணைந்து இக்கொடுஞ் செயலுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

புலவர் ஆறுமுகம், பெரியார் திராவிடர் கழகம்

www.padippakam.com



**நூல் அறிமுகம்**

## உனக்காகப் பாடுகிறேன்

**(கவிதைகள்)** **விலை ரூ.40**

கொண்ட கொள்கையை விடாது பாடும் வீறுமிக்க கவிஞர்களில் உதயை.மு. வீரையன் தலை சிறந்தவர். நாடறிந்த நல்ல பாவலர். நாவலாசிரியர்; படைப்புகள் பலவற்றைத் தமிழ் மண்ணுக்குத் தந்து வருபவர். அவருடைய உயரிய கவிதைத் தொகுப்புதான் 'உனக்காகப் பாடுகிறேன்.' பாரதிதாசனின் 'குயில்' ஏடு தொடங்கி, குத்தூசி, தாமரை எனத் தடம் பதித்து அண்மைக் கால அறிவுவழி வரை தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர். தமிழ்த் தேசியத்தில் கால் பதித்து, மானுடம் பாடும் வானம்பாடிக ளாய் இவருடைய பாட்டு வரிகள் சிறகடிக்கின் றன. மரபில் மூழ்கி முத்தெடுக்கும் இந்த மணித் தமிழ்க் கவிஞர் புதுக்கவிதைகளிலும் போர்ப்ப ரணி இசைத்திருக்கிறார். வாங்கிப் படித்து இது போன்ற கவிதை நூல்களை வாழ வைக்க வேண்டியது நம் நீங்காகக் கடமையாகும்.

## வரமும் சாபமும்

**(கட்டுரைகள்)** **விலை ரூ.40**

கவிஞர் உதயை மு. வீரையனின் எழுத்தாற் றலுக்குச் சான்றாக வெளிவந்துள்ள இன்னொரு நூல் 'வரமும் சாபமும்.' இலக்கியம், சமுதாயம், அரசியல் என்னும் மூன்று தலைப்புகளில் கட்டு ரைகள் இடம் பெற்றுள்ளன. மானுட விடுத லைக்குப் பாடுபட்ட மகத்தான தலைவர்கள், சமூக நீதிப் போராளிகள், தமிழறிஞர்கள் பலரின் சாதனைச் சரித்திரத்தின் சாரமான பகுதிகளைச் சத்தான தமது எழுத்து நடையால் நூலாசிரியர் இவற்றில் பதிவு செய்திருக்கிறார். நாட்டு நடப் புகள், நம்மைச் சுற்றி வரும் அன்றாட அரசியல், கவலையோடு கருத்தில் நிறுத்த வேண்டியுள்ள இன்றைய தலையாய பிரச்சினையாகிய சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியன பற்றியம் இக்கட்டு ரைகள் பேசுகின்றன.

இருநூல்களும் கிடைக்குமிடம்:
மக்கள் பதிப்பகம், 31 வேங்கடேசன் தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.

## நகச்சுற்று

நகத்தைச் சுற்றியிருக்கும் தசையில் தோலுடன் கூடிய வீக்கத்தையும் உண்டாக் கும் இதனால் நோய் தோன்றிய விரலில் எரிச்சலும் - சிலருக்குக் காய்ச்சலும் உண்டா கும். நகச்சுற்று என்றால் பலர் எப்பொழுதும் செய்யும் முறை எலுமிச்சைப் பழத்தில் சிறு துளையிட்டு அதில் நகத்தைப் புதைத்துவிட சில தினங்களில் குணம் தரும். ஆனால் இதைவிட எளிய முறை மருத்துவம் இதோ. சுடுசாம்பலை வைத்துக் கட்டி தாங்கக் கூடிய சூட்டில் இருக்கும் நீரில் விரலை மூழ்க வைக்க வேண்டும். சில மணி நேரம் கழித்த வுடன் வலி நீங்கும். இப்பொழுது நீரில் இருந்து விரலை எடுத்தால் சிவந்து இருக்கும் இந்த விரலின் மீது ஆமணக்கு நெய்யைத் தடவ வேண்டும் (அ) நெய்யில் நனைத்த துணியை விரலைச் சுற்றிக் கட்ட வேண்டும். கட்டிய சில மணிப் பொழுதில் கட்டி பழுத்து உடைந்து விடும் பிறகு தேங்காய் எண்ணெய் தடவி வந்தால் புண் ஆறிவிடும்.

தொகுப்பு: செ. கோவிந்தராசன்

## உரிமைக் கிளர்ச்சியைத் தொடங்குவோம்!

கொஞ்சும் மழலை நெஞ்சமெலாம்
நஞ்சாய் ஆங்கிலம் இருக்குது
வஞ்சகத்தார் வாழ்ந்த தில்லை
வரலாற்றி னைநீ படித்திடு
கடைசி ரத்தம் இருக்குமட்டும்
கன்னித் தமிழை ஆட்சியில்
அமர்த்த வேண்டும் அதுதான் நமக்கு
அடிப்படையான பொது விதி
எடுப்பார் கைப் பிள்ளையாக
எத்தனைநாள் தான் இருப்பது
தடுப்பார் இருப்பார் கெடுப்பார் இருப்பார்
அடிதான் அவர்க்குப் பரிசது
தமிழன் நாட்டில் தமிழில் பேச
தடைகள் போடச் சொல்கிறான்
தலைவன் என்றும் தலைவி என்றும்
தமிழன் வீதியில் உலவுறான்
என்னடா தமிழா ஏற்குமா நீதி
இன்னுமா தாமதம் செய்வது நீ
ஒன்றே செய்வோம் இன்றே செய்வோம்
உரிமைக் கிளர்ச்சியைத் தொடங்குவோம்.

கவிஞர். தி.ர.விசயன்.

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய ஆட்சிப் பணி பற்றிய ஒரு மதிப்பீடு



பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன்

ஆங்கிலேயர் ஆட்சியின் போதிருந்த ஆளும் சுட்டமைப்பில் இந்திய சிவில் சர்வீஸ் (அய்.சி.எஸ்) என்ற இந்தியக் குடிமைப் பணியமைப்பு முதன்மை பெற்றிருந்தது. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் தம் முழு நம்பிக்கைக்கு உரியவர்களாயிருப்பார்கள் என்று கருதித் தம் நாட்டவரையே இப்பணியில் அமர்த்திக் கொண்டனர். நாடு சுதந்தரம் பெற்ற பிறகு அய்.சி.எஸ். பணியமைப்பு அய்.ஏ.எஸ். என்று பெயர் மாற்றம் பெற்றது. 'சிவில் சர்வீஸ்' என்ற குடிமைப் பணி 'அட்மினிஸ்டிரேடிவ் சர்வீஸ்' என்று ஆளுமைப் பணியாக மாறியது. இதுவே 'இந்திய ஆட்சிப் பணி' (இ.ஆ.ப) - அய்.ஏ.எஸ். என்று ஆனது.

அரசு நிர்வாக அமைப்பில் அய்.ஏ.எஸ் என்ற அதிகார வர்க்கத்தின் பங்கு மகத்தானது. மக்கள் நாயக அரசில் மக்களால் - அதுவும் 40 விழுக்காட்டுக்கு மேல் கல்வியறிவு பெறாத மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியில் அமரும் வாய்ப்புப் பெற்றவர்கள் எல்லோருமே ஆட்சியை நடத்திச் செல்லத் தேவையான அரசின் நிர்வாக அமைப்பில் உள்ள மேல்மட்ட அலுவலர்களைச் சார்ந்தே ஆட்சியை நடத்திச் செல்ல வேண்டியவர்களாயுள்ளார்கள்.

'தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்'

- என்னும் வள்ளுவரின் கூற்றுக்கேற்ப, இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஆளுமைத் திறனும் முன் அனுபவமும் இல்லாததால் ஆட்சியிலுள்ள அமைச்சர்கள் தமக்குக் கீழுள்ள அய்.ஏ.எஸ் என்ற அதிகார வர்க்கத்தைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இயலாதவர்களாக - அதிகார வர்க்கத்தின் கைப் பொம்மையாக ஆகிப் போகின்றவர்களே அதிகம். இந்நிலை குறித்து சி.பி.அய் இயக்குநரான திரு.மாதவன் கூறுவதைப் பார்ப்போம்:

"நான் அய்.ஏ.எஸ் பாஸ் பண்ண முடியாமல் போனதற்குக் காரணம் துரதிர்ஷ்டம் தான் என்று நினைத்து அப்போதெல்லாம் வருத்தப் பட்டிருக்கிறேன். ஏனென்றால் என்னைவிட அறிவிலும் திறமையிலும் குறைவானவர்கள் சிலர் அந்த நேரத்தில் அய்.ஏ.எஸ் தேர்வில் வெற்றி பெற்றிருந்தார்கள். நான் சி.பி.அய்யில் சேர்ந்த பிறகு பெரும்பாலான அய்.ஏ.எஸ் அதிகாரிகள் லஞ்சக் கறை படிந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள்..... புத்திசாலித்தனத்துடன் நேர்மையற்ற செயல்களில் ஈடுபடும் அய்.ஏ.எஸ் அதிகாரிகளின் எண்ணிக்கையே அதிகம். அதாவது இவர்களெல்லாம் அரசியல் கட்சித் தலைவர்களின் ஆசைகளுக்கேற்பத் தலையாட்டிக் கொண்டு ஆட்டம் போடுபவர்கள்" என்பதை அறிந்தேன்.

இக்கூற்றில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பதை நாம் சென்ற ஆட்சிக் காலத்தில் நடந்த ஊழல் முறை கேட்டுக்காக முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அமைச்சர்கள், அய்.ஏ.எஸ் அதிகாரிகள் நீதிமன்றத் தீர்ப்புகளின்படி சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பதிலிருந்து அறியலாம்.

அய்.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு அவர்களின் தகுதிக்கு மீறி முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்றே கருதுகிறோம்.

தொழில் நுட்பஞ்சார்ந்த துறைகளிலும் அய்.ஏ.எஸ். அதிகாரிகளையே தலைமைப்

படிப்பகம்

www.padippakam.com



பொறுப்பில் அமர்த்துவது வழக்கமாயுள்ளது. ஒரு துறையின் தலைமைப் பொறுப்புக்கு ஒருவரை நியமிக்கும் போது அத்துறையில் அனுபவ அறிவு பெற்ற, அத்துறையைச் சார்ந்த வல்லுநரை நியமிப்பதே பொருத்தமானது. ஆனால் அவ்வாறின்றி வெளியேயிருந்து - துறைக்குச் சற்றும் தொடர்பில்லாத அய்.ஏ.எஸ் அதிகாரிகளை சகலகலா வல்லவர் என்று கருதித் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளில் அரசு அமர்த்துகிறது. இதனால் விளையும் நன்மை தீமைகளைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

தமிழ்நாட்டு மின்சார வாரியத்தை எடுத்துக் கொண்டால், 1948 - மின்வழங்குச் சட்டப்படி, 1957-இல் நம் மாநிலத்தில் மின்சார வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. முதன்முதலில் ஒரு அய்.சி.எஸ் அதிகாரியைத் தலைவராக அரசு நியமித்தது. அதற்குப் பின்னர் வாரியத்தில் தலைமைப் பொறியாளராக இருந்த பொறியாளர் ஒருவர் தலைவராக வந்தார். இப்பொறியாளரின் தலைமையில் மின்சாரத்துறையில் மாநிலம் பெற்ற வளர்ச்சி மிகச் சிறப்பாக இருந்தது. அப்படிப்பட்ட வளர்ச்சி பிறகு எப்போதும் ஏற்படவே இல்லை. இவர் காலத்திற்குப் பிறகு தொடர்ந்து இவ்வாரியத்திற்குத் தலைவர்களாக அய்.ஏ.எஸ் அதிகாரிகளையே அரசு நியமித்து வருகிறது. மின்சார வாரியம் மிகப்பெரிய நிறுவனம். இதை வெற்றிகரமாக நடத்திச் செல்ல ஒருவருக்கு மிகச் சிறந்த ஆளுமைத் திறனும், தொழில் நுட்பஞ்சார்ந்த பட்டறிவும் இன்றியமையாதன. ஆனால் இதன் தலைவராக வருபவர்கள் அவ்வப்போதுள்ள ஆளுங்கட்சித் தலைமையின் விருப்பு வெறுப்புக்கேற்றவாறு தேர்வு செய்யப்படுகிறார்களேயன்றி, அவர்களுடைய தகுதி திறமையைக் கண்டு அல்ல என்பது கசப்பான உண்மை.

மின்சார உற்பத்தி என்பது அல்லாவூதீனின் அற்புத விளக்கைப் போன்று நினைத்ததும் செய்து முடிக்கக் கூடிய ஒன்றல்ல. பெருகிவரும் மின்சாரத் தேவையைச் சமாளிக்க மின்விசை உற்பத்திக்கான திட்டங்களை முன்கூட்டியே உரிய காலத்தில் திட்டமிட வேண்டும். இதனுடைய முக்கியத்துவம் இத்துறையிலேயே உள்ள வர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். மின்வாரியத்திற்குத் தலைவராக வரும் அய்.ஏ.எஸ் அதிகாரிகள் துறைக்கு முற்றிலும் புதியவர்களாயிருப்பதால் இதன் முக்கியத்துவத்தை இவர்கள் உணருவதில்லை; உணரவும் முடியாது.

ஒரு துறைசார்ந்த அறிவைத் துறையிலுள்ள வல்லுநர்களிடமிருந்து தான் தெரிந்து கொண்டாக வேண்டும். அப்படித் தெரிந்து கொள்வதில் தவறொன்றுமில்லையாயினும் 'அய்.ஏ.எஸ் அதிகாரியான நாம் போய் நமக்குக் கீழுள்ளவர்களிடம் நமக்குத் தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்வதா' என்ற வீம்புப் போக்கு இவர்களைத் தடுக்கிறது. இதனால் திட்டங்கள் பற்றி முடிவு எடுப்பதில் பெரும் கால தாமதம் ஏற்படுகிறது. அரசு மட்டத்தில் முடிவுகள் எடுக்கும்போது திட்டம் பற்றி அரசுத் தலைமைக்கு விளக்கிச் சொல்ல இவர்களின் அரைகுறை அறிவு கை கொடுப்பதில்லை. எனவே முக்கியமான முடிவுகள் எடுப்பதில் தாமதமாவதும் சில சமயங்களில் தவறான முடிவுகள் எடுக்கப்படுவதும் தவிர்க்க முடியாதவையாகின்றன. துறையில் என்ன நடக்கிறது - அரசு என்னென்ன நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று துறைசார்ந்த அமைச்சரும் கவலைப்படுவதில்லை. துறையிலுள்ள வல்லுநர்களோ நிலைமையை நன்கு அறிந்திருந்தாலும் அரசுக்கு நேரடியாக எடுத்துச் செல்லும் வாய்ப்பின்மை காரணமாக துறையின் வளர்ச்சியில் அக்கறை இருந்தும் இதில் தம் பங்கை முழுமையாகச் செலுத்த முடிவதில்லை.

துறையின் அய்.ஏ.எஸ். தலைமைக்குக் கீழே உள்ள துறைசார்ந்த தொழில் நுட்ப வல்லுநர்கள் பெரும்பாலும் ஓய்வுபெறும் வயதினராயிருப்பதால் ஒரு கட்டத்திற்கு மேல் ''கடை விரித்தோம் கொள்வாரில்லை'' என்றெண்ணி வாளாவிருந்து விடுகின்றனர். தொழில்நுட்ப நிறுவனமான மின்சாரவாரியத்திற்கு அத்துறையிலேயே உள்ள பழுத்த அனுபவமும், தொழில் நுட்பத் திறனோடு ஆளுமைத் திறனும் ஒருங்கே அமையப் பெற்ற ஒருவரைத் தலைவராகப் போட்டுத்தான் பார்ப்போமே என்று தமிழ்நாட்டரசு ஒருபோதும் கருதியதில்லை என்பது தான் வியப்பாயுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாட்டைத் தவிர பிற மாநிலங்கள் துறை வல்லுநர்களைத் துறைத் தலைமையிலும், அரசுச் செயலகத்திலும் அமர்த்திக் கொண்டுள் ளன. குசராத் மாநிலத்தில் உலகப்புகழ் பெற்ற ஜாம்தார் என்ற ஒரு நெடுஞ்சாலைத்துறைப் பொறியாளர் கட்டடங்கள் மற்றும் சாலைகள் துறையில் அரசுச் செயலாளராயிருப்பவர் - அண் மையில் அதே துறையில் தலைமைச் செயலாள ராகப் பதவி உயர்த்தப்பட்டுப் பணியாற்றுகிறார். பல மாநிலங்களில் தொடர்ந்தும் இடைவிட்டும் பொறியாளர்கள் மின்வாரியத் தலைவர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் கடந்த 30 ஆண்டுகளாக அய்.ஏ.எஸ். அதிகாரிகளையே வாரியத்தின் த்லைவர்களாக அரசு நியமித்து வருகிறது.

சுதந்தரம் பெற்ற பின்னர் நாடு பல துறைக ளில் நல்ல வளர்ச்சி பெற்றுள்ளதை அறிவோம். இவ்வளர்ச்சியில் அறிவியலறிஞர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோரின் பங்களிப்பு சிறப்பானது. ஆனாலும் இவர்களின் முழுப் பயன் பாட்டை நாடு பெறவில்லை. இதற்குக் காரணம் அரசின் தலைமைப் பீடத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஆளும் அரசையே ஆட்டி வைக்கும் திறன்கொண்ட அய்.ஏ.எஸ் அதிகார வர்க்கமே.

பொதுமக்களும் அரசின் அதிகார வர்க்கம் பற்றி அதிகம் கவலைப்படுவதில்லை. ஆங்கி லேயர் காலத்திலிருந்து மக்களிடம் படிந்து விட்ட அடிமை மனப்பான்மை இப்போதும் அவர்கள் மனதில் வேரூன்றி உள்ளது. ''உன் பையனை ஏன் படிக்க வைக்கவில்லை?'' என்று சாதாரண நிலையில் உள்ள ஒருவரைப் பார்த்துக் கேட்டால் நமக்குக் கிடைக்கும் பதில் - 'இவன் படித்து என்ன பெரிய கலெக்டர்' உத்தியோகமா பார்க்கப் போகிறான்?' என்பதே. ஆக கலெக்டர் உத்தியோகம் என்பது அரசுப் பணியிலே மிக உயர்ந்தது என்று மக்கள் கருதுகிறார்கள். இதற் குச் செய்தி ஊடகங்களும் துணை போகின்றன. நாளிதழ்களில் கலெக்டர்கள் புற்றிய செய்தி வராத நாட்களே இல்லை.

'கலெக்டர் வளர்ச்சிப் பணிகளைப் பார்வை யிடுகிறார். கலெக்டர் அணைக்கட்டைப் பார் வையிடுகிறார். கலெக்டர் ஊராட்சி அவைக் கூட்டத்தைக் கூட்டினார். கலெக்டர் கிராமப்புற இளைஞர்களுக்கு அறிவுரை கூறுகிறார். கலெக் டர் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்து விடுகி றார். கலெக்டர் மின்சாரம் நிறுத்தப்படும் நேரத்தை அறிவிக்கிறார். அரசியல் கட்சிகளுக் குக் கலெக்டரின் எச்சரிக்கை' — இப்படி செய்தித்தாள்கள் முழுக்க - திருப்பிய பக்கமெல் லாம் கலெக்டர் பெயரால் வரும் செய்திகள் தாம். அரசின் வேறு எந்தத்துறை அலுவலர்க ளுக்கும் நாளிதழ்கள், வானொலி, தொலைக் காட்சி போன்றவை இவ்வாறு முக்கியத்துவம் தருவதில்லை.

பல கோடி மதிப்புள்ள அணைக்கட்டுப் பணிகள், சாலைப் பணிகள், மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவும் பணிகள் பல்வேறு துறைப் பொறியாளர்கள் செய்து கொண்டிருந்தா லும் அப்பணிகள் எந்த அளவில் உள்ளன என்ற விவரங்களை எந்த நாளிதழும் தொடர்புடைய துறை வல்லுநர்களைக் கேட்டு வெளியிடுவ தில்லை. ஆரவாரமில்லாத வளர்ச்சித் திட்டப் பணிகளைப் பொறியியல் வல்லுநர்கள் நாட்டிற் காகச் செய்துவந்தாலும் அவர்களுக்கு இப்படிப் பட்ட பொது நிர்வாகிகளுக்குக் கிடைக்கிற விளம்பரங்கள் கிடைப்பதில்லை. அரசு அலுவ லர்கள் தாம் செய்யும் வேலை பற்றி விளம்பரப் படுத்திக் கொள்வதில் குடிமக்களுக்கு என்ன நன்மை? ஓர் அலுவலர் தமக்குக் கீழ் உள்ள அலுவலர்கள் செய்து வரும் வேலைகளைப் பார்வையிடுவது இயல்பானதே. அது அவர் கடமையுங்கூட.

அரசாங்கத்தின் ஊதுகுழலாக மாவட்டங்க ளில் கலெக்டர்கள் செயல்படுகிறார்கள். ஒரு மாவட்டத்தில் மின்விசை எந்தெந்த நேரங்களில் அளிக்கப்படும் என்பதைக் கூட, அம்மாவட்டத் திலேயே உள்ள மின்வாரிய மேலாளும் பொறி ஞர் அறிவிப்பதில்லை. மாவட்டக் கலெக்டரி டம் கொடுத்து அவர்தான் செய்தித்தாளில் அறி விப்பது வழக்கமாயுள்ளது. மாவட்டங்களில் தொழில், வேளாண்மை, சாலை மேம்பாடு போன்ற வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ள பல அரசுத் துறைகள் உள்ளன. நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரியம் போன்ற தொழில் நுட்பஞ் சார்ந்த துறைகள் நிறுவனங்களோடு சட்டப்படி தனித் தனி இயங்கக் கூடியதும் நடைமுறையில் அர

படிப்பகம்

சின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ளதுமான மின் சார வாரியமும் உள்ளன. இத்துறைகளில் தலைமைப் பொறுப்பிலுள்ளவர்கள் பெரும்பாலும் மேலாளும் பொறிஞர்கள் தரத்தில் உள்ளவர்கள். இவர்கள் அனைவரும் 50 வயதைத் தாண்டிய முதுநிலையிலுள்ள துறை வல்லுநர்கள். ஆனால் இவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் அதிகாரத்தைத் தாமாகக் கையிலெடுத்துக் கொண்ட மாவட்டக் கலெக்டர்களோ வயதிலும் அனுபவத்திலும் குறைந்த பொது மேலாளர்கள்; தொழில்நுட்ப அறிவு பெற்றிராதவர்கள். இவர்கள் தம் தந்தை வயதில் உள்ள பிற துறைத் தொழில்நுட்ப வல்லுநர்களின் மேல் ஆதிக்கம் செலுத்தக் கூடிய வகையில் இப்போதுள்ள ஆட்சிக் கட்டமைப்பு உள்ளது.

மாவட்டங்களில் தொழில் நுட்பத் துறை வல்லுநர்களின் பணிகளில் மாவட்டக் கலெக்டர்கள் குறுக்கிட்டுக் குழப்பம் விளைவிக்கும் போக்கு உள்ளது. அய்.ஏ.எஸ். தேறிச் சில ஆண்டுகளிலேயே மாவட்டக் கலெக்டராகப் பிற மாநிலங்களிலிருந்து இங்கே வந்து, மொழி கூடத் தெரியாமல், நம்மீது அதிகாரஞ் செலுத்துகிறார்களே என்று அரசுத் துறைத் தொழில் நுட்ப வல்லுநர்கள் மனம் நொந்துபோய், 'இவர்கள் சொல்லி நாம் செய்வதா!' என்று தன்மானங் கருதி இருப்பதால் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியில் தொய்வுண்டாகிறது. இதனால் பாதிக்கப்படுவோர் மக்களே.

ஆங்கிலேயர் காலத்தில் வரிதண்டும் வருவாய் தலைவர்களாகச் செயல்பட்டவர்கள் தான் அய்.சி.எஸ் அதிகாரிகள். அதனாலேயே 'கலெக்டர்' என்று பெயர் பெற்றனர். தமிழில் ஒரு காலத்தில் தண்டல் நாயகம், தண்டலர்கள் என்றெல்லாம் இவர்களை அழைத்து வந்தவர்கள், பிறகு காலஞ்செல்லச் செல்ல ஆட்சித் தலைவர்கள் என்று தம்மைத் தாமே இந்தத் தண்டல்காரார்கள் அழைத்துக் கொண்டார்கள். இவர்கள் பதவியில் உயரும்போது ஊழலுக்கு வாய்ப்பாக உள்ள பல அரசு நிறுவனங்கள் மற்றும் துறைகளின் தலைமைப் பொறுப்பில் அமர்ந்து கொண்டு அரசியல்வாதிகளுடன் கை கோத்துக் கொண்டு கூட்டாக ஊழல் புரிகிறார்கள். அரசின் இந்தப் பணியமைப்பில் தக்க மாற்றம் வந்தாலன்றி நாடு வளர வேண்டிய அளவுக்கு வளருவதற்கு வாய்ப்பே இல்லை.

இதுபற்றித் தமிழக அரசு சிந்திக்குமா?



## விழுப்புரம் மாவட்டப் பாவேந்தர் இலக்கியப்பேரவை

விழுப்புரம் மாவட்டப் பாவேந்தர் இலக்கியப் பேரவை அமைப்புக் கட்டம், மற்றும் நிர்வாகிகள் தேர்தல் 5-4-2000 அன்று நடைபெற்றது. அனைவரின் கருத்துரைக்குப் பின்பு பாவேந்தர் இலக்கியப் பேரவையின் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் வட்ட நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

இத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட மாவட்ட நிர்வாகிகள் பின்வருமாறு:-

புரவலராக அ.வீரமணி, தலைவராக அ.அணிஸ்அகமத், செயலாளராக அ.சிவஞானம், துணைத் தலைவர்களாக வே.வல்லபராசு, எஸ்.பி. ரகுநாதன், துணைச் செயலாளர்களாக பூ.செல்வம், ர.கமலக்கண்ணன், கவுரவ ஆலோசகர்களாக ஆசிரியர் மு.ரகுபதி, மு.ராசாராமன், எழில் இளங்கோவன்; சட்ட ஆலோசகராக வழக்கறிஞர் அ.ரஸ்கின் ஜோசப், அமைப்பாளராக மு.வ. செந்தில்குமார், மற்றும் வட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செய்தி: அ.வீரமணி, புரவலர்

## மலிவு விலையில் பகவத் கீதை

**2.20 இலட்சம் நூல்கள் விற்கத் திட்டம்**

கோரக்பூரில் உள்ள கீதாபிரஸ் நிறுவனம், இந்த ஆண்டில் மலிவு விலையில் 2.20 இலட்சம் பகவத் கீதை நூல்களை விற்கத் திட்டமிட்டுள்ளது.

கடந்த 77 ஆண்டுகளாக, விளக்கவுரையுடன் கூடிய பகவத் கீதை, இராமாயணம், பாகவதம் முதலான நூல்களை மிகக் குறைந்த விலையில் எல்லா இந்திய மொழிகளிலும் இந் நிறுவனம் வெளியிட்ட வருகிறது.

(கலைமகள், ஏப்ரல் 2000)

*நாம் இப்படி ஏதாவது செய்கிறோமா?*



www.padippakam.com

www.padippakam.com



# பொறியில் சிக்கவைக்கப்பட்ட எலிகள்

க. முகிலன்

இந்திய மக்களின் முடிசூடா மன்னன், ஆசியாவின் ஜோதி, உலக சமாதானப் புறா என்றெல்லாம் புகழப்பட்ட சவகர்லால் நேரு, ஒடுக்கப்பட்டு - கீழ்ச்சாதியினராக வைக்கப்பட்டுள்ள வெகுமக்களின் சமூக, பொருளாதார, விடுதலைக்காக உருப்படியான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. 1946 முதல் 1964இல் தான் சாகின்ற வரையில் இந்தியாவின் பிரதமராக இருந்தார். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டது முதல் வாழ்வின் இறுதிவரையில் திட்டமிட்டு மக்களிடையே தன்னைப் பற்றிப் பரப்பிய மாயக் கவர்ச்சிகளால் வெகு மக்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பெற்றுப் பதவிக்கு வந்தார்.

நேருவுக்குப்பின் நீண்டகாலம் பிரதமராக இருந்த இந்திராகாந்திக்கும் தன் தந்தையைப் போலவே தன்னிகரிலாத் தலைவராகத் தன்னைக் காட்டிக் கொள்வதற்காக மக்களை ஏய்ப்பதற்கான சில உத்திகள் தேவைப்பட்டன. இதனால் பாக்கிஸ்தானுக்கும் அந்நாட்டின் பகுதியாக விளங்கிய கிழங்கு வங்காளத்திற்கும் மூண்ட மோதலில் தலையிட்டு, இந்திய இராணுவத்தை அனுப்பி வங்கதேசத்தைத் தனி நாடாக்கினார். மன்னர்களின் மானியத்தை ஒழித்தார். பெரிய வங்கிகளை நாட்டுடைமையாக்கினார். 'வெள்ளையனே வெளியேறு' என்றது போல, ''வறுமையே வெளியேறு'' என்று முழங்கினார். 'இந்தியா சோசலிச மதச் சார்பற்ற நாடு' என்று அரசியல் சட்ட முகவுரையைத் திருத்தினார். ஆனால் நடப்பில் ஒரு சர்வாதிகாரியாகச் செயல்பட்டார். காங்கிரசுக் கட்சியிலும், அரசமைப்பிலும், நிர்வாகத்திலும் நீதித்துறையிலும் நேருவின் காலத்தில் மிச்சம் மீதியிருந்த சனநாயக உரிமைகளையும், பெயரளவில் பேசப்பட்ட மதச் சார்பின்மைக் கருத்துகளையும், சோசலிசக் கோட்டுபாடுகளையும் குழி தோண்டிப்புதைத்தார். நெருக்கடிநிலை காலத்தில் பாசிச வெறிபிடித்த இட்லரைப் போலவே காட்டாட்சியை நடத்தினார்; இந்து மத வகுப்புவாதியாக மாறினார். இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில்தான் இந்நாட்டின் பெரும் பணக்காரர்களுக்கும் மேல்தட்டு நடுத்தர வர்க்கத்தினருக்கும் தேவையான கலர் டி.வி, குளிர்சாதனப் பெட்டிகள் போன்ற ஆடம்பரப் பொருள்களின் இறக்குமதியை முதன்முதலாக அனுமதித்தார். அவற்றிற்கான இறக்குமதி வரியைக் குறைத்தார்.

மய்ய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் இந்திரா காந்தியின் காலத்தில் அரசியல்வாதிகள் - அதிகாரிகள் என்கிற கள்வர்களின் குகைகளாக மாறின. இந்திய அரசியலில் அயோக்கியர்கள் மட்டுமே தலைவர்களாக இருக்க முடியும் என்ற இழிநிலை இந்திரா காந்தியால் உருவாக்கப்பட்டது. தன் இளைய மகன் சஞ்சய் காந்தி மூலம் பேட்டை ரவுடிகள் அரசியல் தலைவர்களாக ஆக்கப்பட்டனர். குறுகிய கால சனதா ஆட்சிக்குப் பின் 1980 இல் மீண்டும் இந்திரா காந்தி பிரதமராக ஆன பிறகு வகுப்பு வாதம், தனியார் மயமாக்கல், பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தியச் சந்தையைத் திறந்துவிடுதல், அரசியலிலும் சமூகத்திலும் பாசிசப் போக்கு வளர்தல் முதலானவை இந்திரா காந்தியால் ஊக்குவித்து வளர்க்கப்பட்டன. இன்று இந்தியாவில் நிலவும் அரசியல், பொருளாதார சமூகக் கேடுகள் வேகமாக வளரவும் பரவவும் தன் அதிகாரத்தை மிகவும் தவறாகப் பயன்படுத்தினார், இந்திரா காந்தி!

இந்திரா காந்தியின் கொலைக்குப் பின் பிரதமராக்கப்பட்ட இராசிவ் காந்தியின் காலத்தில் சமூக அரசியல் பொருளாதார நிலைமைகள் மேலும் சீரழிந்தன. 'இலஞ்சமும் ஊழலும் உலகெங்கும் இருப்பதுதான்' என்று இந்திரா

படிப்பகம்

www.padippakam.com



வால் நியாயப்படுத்தப் பட்டது; ஊழல் பன்ம டங்காகப் பல்கிப் பெருகியது. இராசிவ் காந்தியு டன் இருந்த ப. சிதம்பரம் போன்ற 'பொடிப் பயல்களால்' தனியார் மயமாக்கலும், பன் னாட்டு நிறுவனங்களின் நுழைவும், ஆதிக்கமும் பெருகின. பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடு 49 விழுக்காடு வரை இருக்கலாம் என்று அனும திக்கப்பட்டது. 1989இல் ஜெனிவாவில் நடை பெற்ற 'காட்' (GATT) ஒப்பந்தப்பேச்சு வார்த்தை களின் போது வளர்ந்த நாடுகள் (G - 7) விதித்த நிபந்தனைகளைக் கண்ணை மூடிக் கொண்டு - உலகச் சந்தையில் தானும் ஒரு பெரும் பொருளாதார வல்லரசாக உருவாக முடியும் என மடத்தனமாக இந்தியா ஏற்றுக் கொண்டது.

இலாபம் ஈட்டாத பொதுத்துறை நிறுவனங் களை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. அரசுடைமையாக்கப் பட்டிருந்த வங்கி கள் அரசியல்வாதிகளின், மற்றும் பணக்காரர் களின் வேட்டைக்காடாயின. அந்நிய மூலதன மும் அதன் ஆதிக்கமும் பெருகின. இதன் தொடர் விளைவாக் ஊழலும் சவலைக் குழந் தையின் பெருத்த வயிறுபோல் வீங்கியது. அரசு ஒதுக்கும் நிதியில் நூறு ரூபாயில் ஆறு ரூபாய் மட்டுமே அடித்தட்டில் இருக்கும் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேருகிறது என்று அடிக்கடி கூறிவந்த இராசிவ் காந்தி, ஃபோபர்ஸ் ஊழலில் சிக்கித் திக்குமுக்காடினார். இதனாலேயே தன் ஆட்சியையும் இழந்தார்.

உயர் தொழில் நுட்பத்தின் மூலம் இந்திய நாட்டின் பொருளாதாரத்தை வளர்ந்த நாடுகளின் பொருளாதார நிலைக்கு இணையாக உயர்த்த முடியும் என்று இராசிவ் காந்தியின் காலத்தில் மக்களிடையே பிரச்சாரம் செய்யப்பட்டது. உயர் தொழில் நுட்பத்திற்காகவும், அவற்றின் மூலத னத்தைப் பெறுவதற்காகவும் இந்திய நாட்டின் இறையாண்மையை வளர்ந்த நாடுகளிடம் அடகு வைக்கும் வேலை தொடங்கப்பட்டது.

மண்டல் குழு பரிந்துரையை நடைமுறைப் படுத்த அரசாணை பிறப்பித்த வி.பி. சிங் அவர்களின் குறுகிய கால ஆட்சிக்குப் பின், இராசிவ் காந்தியின் படுகொலையின் பரிவு அலையினால் பெற்ற வாக்குகளால் நூலிழையில் வென்ற காங்கிரசுக் கட்சியின் பிரதமராக பகல் கொள்ளைக்காரன் பி.வி. நரசிம்மராவ் பொறுப்பு ஏற்றார். உலக வங்கியின் வற்புறுத்தலால் மன் மோகன் சிங் நிதி அமைச்சராக்கப்பட்டார். 1991 இல் மய்ய அரசின் முதன்மையான கொள்கை யாக, 'புதிய பொருளாதாரக் கொள்கை' அறிவிக் கப்பட்டது. இந்தியப் பெரு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களும் இந்தியாவில் தொழில்கள் தொடங்குவதற்கு இடையூறாக இருப்பதாக முதலாளிகளால் கருதப்பட்ட தடை கள் அனைத்தும் நீக்கப்பட்டன. அந்நிய நாட்டு மூலதனம் 49 விழுக்காடாக மட்டுமே இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. நூறு விழுக்காடு அளவிற்கும் அந்நிய மூலதனம் இருக்கலாம் என்று சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் உச்சக் கட்டமாக - அமைச்சரவையிலோ, நாடாளுமன் றத்திலோ, ஆளும் கட்சியாக இருந்த காங்கிர சின் செயற் குழுவிலோ பொதுக்குழுவிலோ விவாதிக்காமல், எதிர்க்கட்சிகளின் கருத்தையும் கேட்டறியாமல், நரசிம்மராவ் அரசு 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மரகேஷில் நடைபெற்ற உலக வணிக அமைப்பினால் (WTO) உருவாக் கப்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 1995 சனவரி 1ஆம் தேதி முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட உலகவணிக ஒப்பந்த விதிகளை அமல்படுத்துவதற்காக எல்லா நாடுக ளும் தங்கள் நாட்டின் விதிகளை மாற்றியமை யக்க வேண்டும் என்பதும் அதில் ஒரு விதியாக் கப்பட்டிருந்தது.

அமெரிக்கா, சப்பான், செருமனி, பிரான்சு, பிரிட்டன், இத்தாலி முதலான வளர்ந்த நாடுகள் மற்ற நாடுகளில் தங்கள் மூலதனத்தைத் தடை யின்றிக் குவிக்கவும், அந்நாடுகளின் பொருளா தாரத்தைத் தம் விருப்பம் போல் ஆட்டிப்படைக் கவும், தாராள மயமாக்கல், கட்டுப்பாடற்ற சந்தை, உலக மயமாக்கல் என்ற பெயர்களால் உலக வணிக அமைப்பு, உலக வங்கி, பன் னாட்டு நிதியம் ஆகியவற்றின் மூலம் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன.

இராசிவ் காந்தி தன் ஆட்சிக் காலத்தில் 1986ஆம் ஆண்டு அயோத்தியில் பாபர் மசூதி

படிப்பகம்

www.padippakam.com



யின் பூட்டுகள் உடைக்கப்பட்டு இந்துக்களின் வழிபாட்டிற்குத் திறந்து விட்டது போல், பொருளாதாரத் துறையில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதற்கும் அவர்தான் இந்தியச் சந்தையைத் திறந்து விட்டார்.

பிரதமராக இருந்த நரசிம்மராவ் 1992 டிசம்பர் 6ஆம் நாள் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் வானரப் படைகளாக மாறி பாபர் மசூதி இடித்துத் தரைமட்டமாக்கப்படுவதற்கு வேண்டுமென்றே உறுதுணையாக இருந்தது போல், பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் ஆதிக்கத்திற்குத் தடைகளாகக் கருதப்பட்டவைகளைத் தகர்த்தார். வெகு மக்களுக்கு உலகில் வேறு எங்கும் இல்லாத அளவில் மலிவு விலையில் மருந்துகள் கிடைப்பதற்கு அரணாக விளங்கிய 1970ஆம் ஆண்டைய இந்திய காப்புரிமைச் சட்டம் ஒழிக்கப்பட்டுவிட்டது. மக்கள் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஆதாரத்தை அளித்து வந்த அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த காப்பீட்டுத்துறை தனியார் மயமாக்கப்பட்டு விட்டது. எதிர்க் கட்சித் தலைவராக இருந்த போது சுதேசியத்தின் பேரால் காப்புரிமை, காப்பீடு சட்டத் திருத்தங்களை எதிர்த்த வாஜ்பாயும், பாரதிய சனதாக் கட்சியும் தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாய்கிறது என்பது போல் நரசிம்மராவ் அரசைவிட பன்மடங்கு முனைப்புடன் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆலவட்டம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

அய்ரோப்பாவில் 1700களில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் விளைவாகத் தத்தம் நாட்டின் தேவைக்குமேல் உற்பத்தி பெருகியது. உபரிப் பொருள்களை விற்பதற்காகப் பல அய்ரோப்பிய நாடுகள் புதிய சந்தைகளைத் தேடிப் புறப்பட்டன. இதனால் பல நாடுகள் காலனி நாடுகளாயின. காலனிய ஆதிக்கப் போட்டியில் பிரிட்டன் பேரரசாக உருவாயிற்று. அடிமை கொள்ள வேறு நாடுகள் இல்லாத காரணத்தால் ஆதிக்கச் சக்திகளாக விளங்கிய நாடுகள் தமக்குள் போரிட்டுக் கொண்டன.

1914 முதல் 1918 வரை நடந்த முதல் உலகப் போரில் பிரிட்டன், ஜெர்மனி, பிரான்சு, இத்தாலி போன்ற அய்ரோப்பிய நாடுகள் ஈடுபட்டன. இதற்கு முன் 1905இல் மிகச் சிறிய நாடான சப்பான் தன் ஏகாதிபத்தியப் பேராசையால் பெரிய நாடாக இருந்த இரஷ்யாவை வீழ்த்தியது. உலக நாடுகள் சப்பானைக் கண்டு வியந்தன. 1939 முதல் 1945 வரை இரண்டாம் உலகப் போர் நடந்தது. மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுடன் அமெரிக்காவும், சோவியத் ஒன்றியமும் போரில் இறங்கின.

இரண்டு உலகப் போர்களில் ஈடுபட்ட நாடுகளே இன்றும் உலகின் ஆதிக்க சக்திகளாக இருக்கின்றன. முன்பு படை வலிமையால் தம் ஆதிக்கத்தை நிலைக்க வைக்கவும், விரிவுபடுத்தவும் முயன்றன. இப்போது ஆயுத பலத்துடன், பண பலத்தின் மூலமும் இதைச் செய்து கொண்டிருக்கின்றன. உலகப் போர்களில் அரசு முன்னின்று செயல்பட்டது. ஆனால் இன்று அரசின் துணையுடன் பன்னாட்டு நிறுவனங்கள் தாம் எதையும் தீர்மானிக்கும் சக்தியாக உருவெடுத்துள்ளன. முன்பு பொருள்களின் உற்பத்தியும், அவற்றின் சந்தையும் முதன்மைப் பாத்திரம் பெற்றிருந்தன. ஆனால் கடந்த இருபது ஆண்டுகளில் கணினி, கணினி வலை (internet), இணையம் (Website) எனப்படும் உயர் தொழில் நுட்பத் தகவல் தொடர்புச் சாதனங்கள்தாம் முதலிடம் பெற்றுள்ளன.

இந்தியாவில் கல்லூரியில் பட்டப் படிப்பை எட்டுகின்ற இளைஞர்களின் 'இலட்சிய புருஷராக' இன்று இருப்பவர் பில்கேட்ஸ். இவர் உலகில் உள்ள பணக்காரர்களில் முதலாவதாக இருக்கும் கோடீசுவரர். இரண்டாமவராக உள்ள கோடீசுவரருக்கும் பில்கேட்சின் சொத்துக்கும் மடுவுக்கும் மலைக்குமான இடைவெளி! 1996இல் பில்கேட்சின் நிகர சொத்து மதிப்பு (மொத்த சொத்து மதிப்பிலிருந்து கடன்களின் தொகையைக் கழித்தால் கிடைப்பது) 2,04,000 கோடி ரூபாய்! இத்தொகை 1999இல் 3,60,000 கோடி ரூபாயாக உயர்ந்தது.

பில்கேட்ஸ் மைக்ரோ சாஃப்ட் (Microsoft) என்கிற மென்பொருள் கணினி நிறுவனத்தின் சொந்தக்காரர். இத்துறையில் இவருக்குப் போட்டியாக வேறு எவரும் வரக்கூடாது என்பதற்காக 'நியாயமான போட்டி' என்பதற்கு எதிரான பல

படிப்பகம்

www.padippakam.com



செயல்களைச் (anti - Competetive practices) செய்தார் என்று ஏப்ரல் 3ஆம் நாள் அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன் விளைவாக அமெரிக்காவின் தொழில்நுட்பப் பங்குச்சந்தை (NASDAQ) யின் மதிப்பு ஒரே நாளில் சரிந்தது. இதன் எதிரொலியாக ஏப்ரல் 4ஆம் நாள் பம்பாயில் பங்குச் சந்தையிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது.

வணிகம் என்பது பொருள்களின் உற்பத்தி, சந்தையில் அவற்றின் விற்பனை என்பது மாறி விட்டது; 'கைக்குக் கை மாறும் பணமே' என்பது போல், பணமே வணிகப் பொருளாகி விட்டது. உலகத் தொழிலாளர் அமைப்பின் (ILO) இயக்குநராக இருக்கும் ஜுவன் சோமா வியர் (Juan Somavia) உலக மயமாக்கல் என்ற இன்றைய பொருளாதாரம் என்பது சூதாட்ட முதலாளியமாகும் (Casino Capitalism) என்கிறார். 'நிலையில்லாது உருண்டோடிடும் பணமே' என்கிற பழைய திரைப்படப் பாடல் வரி நினைவிற்கு வருகிறது. இந்தியாவில் இருபது ஆண்டுகளுக்கு முன் பங்குச் சந்தை என்பது அதில் ஈடுபட்டிருந்த பார்ப்பனர்களுக்கும் முதலாளிகளுக்கும் மட்டுமே தெரியும். ஹர்ஷத் மேத்தாவின் மாபெரும் ஊழலுக்குப் பிறகுதான் பங்குச் சந்தையைப் பற்றிப், படிக்காதவர்கள் கூட, அறியும் நிலை ஏற்பட்டது. ஹர்ஷத் மேத்தாவின் ஊழலால் 1,00,000 கோடி ரூபாயை இலட்சக் கணக்கான நடுத்தர மக்கள் இழந்தனர். 1980களின் மத்தியில் கூட அமெரிக்காவில் பங்குச் சந்தையில் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ இருபது விழுக்காடு குடும்பங்கள் மட்டுமே ஈடுபட்டிருந்தனர். ஆனால் 1999இல் இது 52 விழுக்காடு உயர்ந்து விட்டது. உலக அளவில் பங்குச்சந்தையில் ஈடுபட்டு முதல் நிலை வகிக்கும் 50 நிறுவனங்களின் புள்ளி விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| நாட்டின் பெயர் | நிறுவனங்களின் எண்ணிக்கை | சந்தை மூலதனமதிப்பு பில்லியன் டாலர் | அதன் விழுக்காடு |
|---|---|---|---|
| அமெரிக்கா | 33 | 4901.2 | 71.8 |
| பிரிட்டன் | 5 | 591.6 | 8.7 |
| சுவிட்சர்லாந்த் | 3 | 249.0 | 3.6 |
| சப்பான் | 3 | 478.0. | 7.0 |
| ஜெர்மனி | 2 | 199.2 | 2.9 |
| பிரான்சு | 1 | 73.6 | 1.2 |
| மற்றவை | 3 | 329.9 | 4.8 |
| மொத்தம் | 50 | 6822.5 | 100 |

(Source: Computed from J.P. Morgan Securities database for July 1999. ஒரு பில்லியன் என்பது 100 கோடி டாலர் - இந்திய ரூபாய் மதிப்பில் தோராயமாக 4400 கோடி ரூபாய்).

அமெரிக்காவின் பங்குச்சந்தை முதலீட்டில் முன்னணியில் உள்ள பத்து நிறுவனங்களில் அய்ந்து நிறுவனங்கள் உயர் தொழில் நுட்பத்துறையில் உலகின் முதல்நிலை இடத்தைப் பிடித்துள்ளன. மேலே உள்ள அட்டவணைப்படி அமெரிக்க நிறுவனங்களின் பங்கு 72 விழுக்காடு! ஆறு நாடுகளும் சேர்த்து 94 விழுக்காடு! இத்தகைய சமனற்ற நிலையில் சுதந்தரமான — கட்டுப்பாடற்ற போட்டி என்று கூப்பாடு போடுகிறவர்களே, மூன்றாம் உலக நாடுகள் மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுடன் போட்டியிட்டு எவ்வாறு வெல்ல முடியும்? இன்றுள்ள கணினிவலை வசதியில், உலகில் 16 வீழுக்காடு மக்கள் தொகையை மட்டுமே பெற்றுள்ள வளர்ந்த நாடுகளில் 97 விழுக்காடு உள்ளது. மீதி 84 விழுக்காடு மக்களிடம் 3 விழுக்காடு அளவிற்கே இணைய வசதி இருக்கிறது! தொழில் நுட்ப ஏகாதிபத்தியத்திற்கு இந்தியாவும் இரையாகி வருகிறது.

இனி, பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் ஆதிக்க நிலையைப் பார்ப்போம். 1990களின் தொடக்கத்தில் மொத்தம் 37,000 பன்னாட்டு நிறுவனங்கள் இருந்தன. இவற்றுடன் 1,75,000 துணை நிறுவனங்கள் இணைந்து (தரகு முதலாளிகளாக) செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. சிறிய குண்டூசி முதல் உயர் தொழில் நுட்பம் பொருந்திய இயந்திர உற்பத்தி வரை எல்லா நிலைகளிலும் இவற்றின் ஆதிக்கமே கோலோச்சிக் கொண்டிருக்கிறது. மேலும் உலகச் சந்தைப் போட்டியில் தம்மை மேலும் வலிமைப்படுத்திக் கொள்ள மற்ற பெரிய நிறுவனங்களுடன் சேர்ந்து கூட்டு நிறுவனமாகச்

படிப்பகம்

www.padippakam.com



செய்படுகின்றன. செருமனியில் உற்பத்தியில் மிகப் பெரிய நிறுவனங்களாக உள்ள (Veba)வும், (Viga) என்ற நிறுவனமும் இணைந்து (VV) என்ற பெயரில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செயல்படுவது என்று அண்மையில் முடிவு செய்துள்ளன. இதே போல் இந்தியாவில் காப் பீட்டுத் தொழிலில் டி.வி.எஸ். குழுமத்தைச் சேர்ந்த சுந்தரம் ஃபைனாஸ் 50 விழுக்காடு முதலீடும், 300 ஆண்டுகள் காப்பீட்டுத்துறையில் அனுபவமும் 55 நாடுகளில் கிளைகளும் கொண் டுள்ள இலண்டனைச் சேர்ந்த ராயவ் அன்ட் சன் அலையன்ஸ் (R.S.A) நிறுவனம் 26 விழுக் காடு முதலீடும் இட்டு இணைந்து இந்தியாவில் செயல்பட முடிவு செய்துள்ளன (தினமணி தலையங்கம் 13-4-2000)

பெரிய மீன் சிறிய மீனை விழுங்குவது போல ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்தை விலைக்கு வாங்கி இணைத்துக் கொள்கின்றது. கொக்கோ கோலா (coke) நிறுவனம் இந்தியா வில் இருந்த பார்லே நிறுவனத்தை விலை கொடுத்துத் தனதாக்கிக் கொண்டது. உலக அளவில் 1980க்குப் பிறகு பெரிய நிறுவனங்கள் இணைவது அதிக அளவில் நடந்து வருகிறது.

முதல் நிலையில் உள்ள 200 பன்னாட்டு நிறுவனங்கள் (TNCS), அவற்றின் வருவாய், மற்றும் இலாபம் - 1998. 1 மில்லியன் என்பது 10 இலட்சம்; 1 டாலர் = ரூ.44.

| நாட்டின் பெயர் | நிறுவனங்களின் எண்ணிக்கை | வருவாய் (மில்லியன் டாலர்) | இலாபம் (மில்லியன் டாலர்) | 200 நிறுவ னங்களில் வருவாய் | இலாபம் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| அமெரிக்கா | 74 | 2776942 | 183463 | 36.5 | 52.7 |
| சப்பான் | 41 | 1830613 | 39018 | 24.1 | 11.2 |
| ஜெர்மனி | 23 | 958379 | 29407 | 12.6 | 8.4 |
| பிரான்சு | 19 | 610317 | 20072 | 8.0 | 5.8 |
| பிரிட்டன் | 13 | 399808 | 28389 | 5.3 | 8.2 |
| சுவிஸ்சர்லாந் | 6 | 217728 | 13457 | 2.8 | 3.9 |
| இத்தாலி | 5 | 179789 | 8951 | 2.4 | 2.6 |
| நெதர்லாந் | 4 | 158029 | 12095 | 2.1 | 3.5 |
| பிரிட்டன் நெதர்லாந் | 2 | 138600 | 3620 | 1.8 | 1.0 |
| தென்கொரியா | 3 | 82020 | 68 | 1.1 | 0.0 |
| சீனா | 3 | 76998 | 1294 | 1.0 | 0.4 |
| சுவீடன் | 2 | 49963 | 2725 | 0.7 | 0.8 |
| பெல்ஜியம்/ நெதர்லாந் | 1 | 31325 | 1521 | 0.4 | 0.4 |
| வெனிசுலா | 1 | 25659 | 663 | 0.3 | 0.2 |
| பிரேசில் | 1 | 25073 | 749 | 0.3 | 0.2 |
| மெக்சிகோ | 1 | 20981 | 1108 | 0.3 | 0.3 |
| ஸ்பெயின் | 1 | 19456 | 1456 | 0.3 | 0.3 |
| மொத்தம் | 200 | 7601680 | 348056 | 100.0 | 100.0 |
| உலகின் மொத்த தேசிய உற் பத்தியில் (GDP) 200 நிறுவனங்களின் பங்கு | | 26.3% | | | |

படிப்பகம்

www.padippakam.com



மேலே குறிப்பிட்டுள்ள அட்டவணைகள் இரண்டும் *2000 சனவரி 8-14,* நாளிட்ட ('Economic and Political weekly') இதழிலிருந்து தரப்பட்டுள்ளன.

மத்திய அரசின் வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் முரசொலி மாறன் உலக வணிக அமைப்புடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தப் படி, 2000 ஏப்ரல் 1 ஆம் தேதி முதல், 714 பொருள்கள் மீதான இறக்குமதியின் அளவுக்கட்டுப்பாடு நீக்கப்படுகிறது என்றும், 2001 ஏப்ரல் முதல் மேற்கொண்டு மேலும் 715 பொருள்களுக்கு இறக்குமதி அளவுமீதான கட்டுப்பாடு நீக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். இப்போது அறிவித்துள்ள பட்டியலில் அரிசி மாவு, கோதுமை மாவு, தேங்காய், வெற்றிலை, வேப்பங் கொட்டை, தக்காளி சட்டினி, மிளகாய் மற்றும் மாங்காய் ஊறுகாய், பொம்மைகள் போன்றவை இடம் பெற்றுள்ளன. இந்தியாவில் எளிதாகத் தயாரிக்கப்படக் கூடிய பொருள்களே இப்பட்டிய லில் உள்ளன. இது மாபெரும் கொடுஞ் செயலாகும்.

புதிய பொருளாதாரக் கொள்கையால் கடந்த பத்து ஆண்டுகளில் இரண்டு கோடிப் பேர் வேலை இழந்தனர். பன்னாட்டு நிறுவனங்களின் போட்டியில் மூன்றாம் உலக நாடுகள் அறிவிக்கப் படாத அடிமைகளாகி வருகின்றன.

ஏழை நாடுகள் பொறியில் சிக்க வைக்கப் பட்ட எலிகள் ஆகிவிட்டன.

ஒரு சோசலிசப் புரட்சியின் மூலம் மட்டுமே இந்நிலையை முறியடிக்க முடியும்.

# திருக்குறள் பேரவை முதலாம் ஆண்டு நிறைவு விழா



உலகப் பொதுமறை திருக்குறள் பேரவையின் முதலாம் ஆண்டு விழா காஞ்சிபுரம் பஞ்சுப்பேட்டை பெரிய தெருவில் *06.02.2000* ஞாயிறு மாலை *4.00* மணிக்கு நடைபெற்றது. சமூக நீதிப்பேரவைத் தலைவர் க. கோதண்டன் தலைமை தாங்கினார். திருக்குறள் பேரவை அமைப்பாளர் ஆ. சோதி வரவேற்பு நிகழ்த்தினார். காஞ்சி கலைக் குழுவினரின் தமிழ் எழுச்சி இசை நடைபெற்றது. ஆ. சண்முக நாயகர், மு. மாணிக்கம் பிள்ளை, கே. எல். இராஜாராம், இரா. வடிவேல் முன்னிலை வகித்தனர். பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த *44* குழந்தைகள் திருக்குறளை ஒப்புவித்தனர். பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த, பொ. பழனி, ஆ. திருவேங்கிடம், மா. மாதவன், ந. ஜோதி, எஸ்.ஆர். அரங்கநாதன், வே. பன்னீர் செல்வம், க. அரங்கநாதன், மு. விஸ்வநாதன், மா. சோமசுந்தரம், பி.காம். எச்.டி.சி. சி. நடராசன் ஆகியோரும் உரையாற்றினர். சிறப்புரையாக கு. அருளாநந்தன், திருக்குறள் அறிவுரை நிழத்தினார். திருக்குறளை ஒப்புவித்த *44* குழந்தைகளுக்கு சிற்பக் கலாமணி சுப்பய்ய ஸ்தபதி பரிசுகளை வழங்கினார். எஸ். அறிவழகன் நன்றி கூற நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது.

படிப்பகம்

www.padippakam.com



# காஷ்மீர் சிக்கல்

ஜம்மு - காஷ்மீர் சிக்கல் 52 ஆண்டுகளாகவே தீர்க்கப்படாத ஒன்றாக் இருக்கிறது.

இப்படியே இச்சிக்கல் நீடிப்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. ஜம்மு - காஷ்மீர் மக்கள் தங்கள் நாடு தனி நாடாக இருக்க வேண்டுமா, இந்தியாவுடன் இணைந்தே இருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க ஏற்ற வகையில் அங்கு ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு (Referendum) நடத்திட இந்திய அரசு முட்டுக்கட்டை போடுவது.

2. இந்திய அரசின் கீழ், இந்திய அரசின் ஒப்புதலோடு 1953இல் அமைக்கப்பட்ட ஜம்மு - காஷ்மீர் அரசியல் அமைப்பு அவை உருவாக்கம் செய்து நிறைவேற்றிய ஜம்மு - காஷ்மீர் அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்ட சிறப்பு உரிமைகளை இந்திய அரசு பறித்துக் கொண்டது.

3. இவற்றுக்கு இடையில் இந்தியா - பாக்கிஸ்தான் எல்லைக் கோட்டை (LoC) உறுதி செய்து கொள்ள இந்தியாவும் பாக்கிஸ்தானும் சம்மதிக்காமல், எல்லை கடத்தல் என்கிற பேராலும், சியாசென் பனிப் பாறைப் பகுதி யாருக்குச் சொந்தம் என்கிற பேராலும் ஆண்டு தோறும் 365 நாள்களிலும் பாக்கிஸ்தானும் இந்தியாவும் சண்டையிட்டுக் கொள்ளுவது.

இவை தீராத சிக்கல்களாகவே இருக்க வேண்டும் என்பதில் இந்தியாவும், பாக்கிஸ்தானும் அக்கறை காட்டுகின்றன. இரு நாடுகளும் தங்கள் தங்கள் நாடுகளில் உள்ள மக்களில் 50% மக்களை எழுத்தறிவு அற்றவர்களாக - ஏழ்மையில் உழல்பவர்களாகவே வைத்துக் கொண்டு இவர்களுக்கு ''இந்தியர்'' ''பாக்கிஸ்தானியர்'' என்கிற வெறியை மட்டும் ஊட்டுவதற்கு வேண்டுமென்றே வம்புச் சண்டைகளை முளைக்க வைக்கின்றன. இந்திய அரசு இந்த எல்லைப் பாதுகாப்புக்கும் காவல் துறைக்கும் எல்லை ஓரச் சண்டைகளுக்கும் மட்டும் நாள் ஒன்றுக்கு 11 கோடி ரூபாய்க்கு மேல் செல்வு செய்கிறது. பாக்கிஸ்தானும் இதற்கு இளைத்தது அல்ல.

இந்த இலட்சணத்தில் பாக்கிஸ்தான் அய்.எஸ்.அய். (ISI) உளவு நிறுவனம், ஆப்கானியப் போராளிகள், பின்லேடனின் கையாள்கள் என் போர் இந்தியாவுக்குள் தமிழ்நாடு வரையில் பரவி நின்று இந்திய இஸ்லாமியர்களிடம் இந்தியாவின் பேரில் வெறுப்பை ஊட்டிட முயல்கின்றனர். இந்திய இராணுவ இரகசியங்கள், இந்திய உள்நாட்டு நிலவரங்கள் இவற்றை வேவு பார்த்து அறிகின்றனர். இது அண்மைக் காலமாகத் திட்டமிட்டே பெருஞ் செலவோடு நடத்தப்படுகிறது.

இத்துடன் இருநாடுகளும் நின்று விட்டனவா? இல்லை.

இந்தியாவின் - பாக்கிஸ்தானின் பழைய ஆண்டையான பிரிட்டானியரிடம், தங்கள் தங்கள் நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேட வேண்டி, ஒவ்வோர் ஆண்டிலும் இரண்டு அரசுகளும் பிரிட்டனில் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியா முழுவதிலும் இஸ்லாமியருக்கும் கிறித்துவருக்கும் எதிரான உணர்வுகளைத் தூண்டிவிடுவதில் ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள், விசுவ இந்து பரிசத், மற்றும் பாரதிய சனதா அமைப்புகளும் கட்சியும் முழு நாட்டம் செலுத்துகின்றன.

இதற்கு இணையாக பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமிய அமைப்புகளும், உலக இஸ்லாமிய நாடுகள் அமைப்பு (OIC), அரபு நாடுகள், ஆப்கானிஸ்தான் முதலானவையும் அய்ரோப்பிய நாடுகளில் இந்தியாவுக்கு எதிரான பிரசாரத்தை முடுக்கிவிடுவதில் தீவிரமாக உள்ளன.

உலக அரங்கில் இருபெரும் வல்லரசுகளாக - இரு ஆதிக்க முனைகளாக விளங்கின அமெரிக்காவும் சோவியத்தும். இன்று சோவியத் முனை

படிப்பகம்

www.padippakam.com



இல்லை. எனவே உலகத்தின் ஒரே அடியாளாக - ஒரு முனை ஆதிக்க நாடாக அமெரிக்கா உருவாகிவிட்டது.

இன்று இந்தியாவும் பாக்கிஸ்தானும் அமெரிக்க காங்கிரஸ் எனப்படுகிற அமெரிக்க நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களிடையே தங்கள் தங்கள் நிலைப்பாட்டுக்கு ஆதரவு திரட்ட வேண்டி, கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கின்றன. இதற்கென உள்ள தரகு வேலை செய்யும் அமெரிக்கச் சட்டத் தொழில் நிறுவனங்களை இரண்டு நாடுகளும் பணம் தந்து அமர்த்திக் கொள்ளுகின்றன. அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பணம் தந்து செல்வாக்குத் தேடும் வேலையை இந்தத் தரகு நிறுவனங்கள் நன்றாகவே செய்கின்றன.

பாக்கிஸ்தான் அரசு அமெரிக்காவிலுள்ள பட்டான் (Patton), பாக்ஸ் & புளோ (Boggs and Blow), லேன்னி டேவிஸ் (Lanny Davis), எனும் சட்ட நிறுவனங்களை மாதம் 22,500 டாலர் சம்பளத்தில் தங்கள் கட்சிக்கு ஆதரவு தேட அமர்த்தியுள்ளது. அத்துடன் சார்லெஸ் வில்ரன் (Charles Wilron), என்பவருக்கும் மாதம் 30,000 டாலர் சம்பளம் தந்து அமர்த்தியுள்ளது. கி.பி. 2000 மார்ச்சு கடைசியில் இந்தியாவுக்கு வருகை தந்த அமெரிக்க அதிபர் கிளிண்டன் பாக்கிஸ்தானுக்கும் செல்ல வேண்டும் என்று பரிந்துரை செய்து - அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் (மக்கள் நாயகக் கட்சி) டேவிட் இ. போனியர், டாம் கேம்ப்பெல், ஜேம்ஸ் டா. மோரன், மேஜர் ஆர். ஒவென்ஸ், டேல் இ. கில்டீ, ஜான் பி. மோரன், மேஜர் ஆர். ஓவென்ஸ், டேல் இ. கில்டீ, ஜான் எஃப் டயர்னீ ஆகிய 9 பேரும் 18-2-2000ல் மடல் மூலம் வேண்டுகோள் விடுத்தனர். இந்தியாவோ இதில் பாக்கிஸ்தானையும் மிஞ்சிவிட்டது.

இந்தியா அமெரிக்காவிலுள்ள வென்னெர் (Venner), லிப் வெர்ட் (Liipfert), பென்ர் ஹார்டு (Bernhard), மெஃபெர்சன் (MCPherson), ஹேண்டு (Hand) ஆகிய சட்ட நிறுவனங்களை மாதம் 50,000 டாலர் சம்பளத்துக்கு அமர்த்தியுள்ளது. மேலும் அமெரிக்க செனட் எனப்படும் மேலவையில் உள்ள ஜார்ஜ் மிட்செல் (George Mitchell), இராபர்ட் டோல் (Robert Dole), ஸ்டீபன் சொலார்ஸ் (Stephen Solarz) என்கிற செல்வாக்குப் பெற்ற உறுப்பினர்களுக்கு மாதம் 25,000 டாலர் ஊதியம் தந்து அமர்த்தியுள்ளது.

இவர்கள் முறையே பாக்கிஸ்தான், இந்தியா இருதரப்புக் கட்சிகளையும் ஆதரித்துத் தரகு வேலை செய்து அமெரிக்க நாடாளுமன்ற **(Congress)** உறுப்பினர்கள், அமெரிக்கக் குடி அரசுத் தலைவரின் வெள்ளை மாளிகை **(White House)** மற்றும் அரசாங்க விவகாரத் துறை **(State Department)** இவற்றில் அவரவர் தரப்புக்குச் செல்வாக்குத் தேடுகிறார்கள்.

அய்க்கிய நாடுகள் அவை **(U.N.O)**, பாதுகாப்புக் குழு **(Security Council)** இவற்றை ஆட்டிப் படைப்பது அமெரிக்காவே. எனவே அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றுவிட்டால் காஷ்மீர் பற்றிய தங்கள் தங்கள் தரப்பு நிலைப்பாட்டுக்கு உலக அளவில் ஆதரவு வரும் என்று எண்ணி இந்த இரண்டு நாடுகளும் மனப்பால் குடிக்கின்றன. சண்டைக்காரனை விட்டுவிட்டு சாட்சிக்காரன் காலில் இரண்டு நாடுகளையும் அடகு வைக்கின்றனர் இந்தியா - பாக்கிஸ்தான் அரசியல் திருடர்கள்.

இஸ்லாமியருக்கு எதிராக அமெரிக்கா செயல்படுவதைத் தடுக்க வேண்டி, ஆப்கானிய தலிபன் ஆதரவுடன், ஒசாமாபின்லேடன் அமெரிக்காவின் அயல் நாடுகளிலுள்ள தூதுவர் அலுவலகங்களுக்குப் பெரிய தலைவலியையே உண்டு பண்ணுகிறான்.

இன்று உலகின் பல நாடுகளிலும் ஊடுருவுகிற இஸ்லாமிய தீவிரவாதிகள் மூலம் இஸ்லாமியருக்கும் கிறித்துவருக்கும் மிக மிக விரைவில் உலக அளவிலான போராட்டம் வெடித்து அதுவே உலகச் சண்டையாக மாறும் சூழ்நிலை பெருகிவருகிறது. இன்றைய உலகில் மிக்பெரிய எண்ணிக்கையினர் கிறித்துவரும் இஸ்லாமியரும்.

இந்த நிலையில் இந்தியாவில் 3000 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட பிராமண மதம் 3000 ஆண்டுகளில், 80 கோடிப் பேருக்கு மேல் தன் ஆதிக்கத்துக்குள் கொண்டுவர முடியவில்லை. மனிதத்தன்மை இல்லாத மதம் - மனிதனில் பிறவியிலேயே உயர்ந்தவன் தாழ்ந்தவன் உண்டு எனக்கற்பித்து நிலைக்க வைத்த

படிப்பகம்

www.padippakam.com



மதம் இந்து மதம். இன்றும் மதத்தின் பேரால் தீண்டாமையைக் கொண்டாடுவது இந்து மதம்.

இந்தக் காட்டுமிராண்டி மதத்தின் காவலர்கள் இஸ்லாத்தையும் கிறித்துவத்தையும் அழித்து ஒழித்துவிட கடந்த 75 ஆண்டுகளாகத் தீவிர முயற்சி செய்கின்றனர். 1948 முதல் எல்லா தீவிர முயற்சியும் செய்கின்றனர், 1948 முதல் எல்லா அரசியல் கட்சிகளிலும் சாதிச் சங்கங்களிலும் பொது அமைப்புகளிலும் இவர்கள் ஊடுருவினர்.

ஆட்சி அதிகாரம் இல்லாமல் இந்துமத ஆதிக்கத்தைத் தொடர்ந்து நிலைக்க வைக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டனர். இவர்களே ஆர்.எஸ்.எஸ். காரர்கள்.

இவர்களின் குறிக்கோள் அகண்ட பாரதம் அமைப்பது. இதை இன்று ஆட்சிப் பொறுப்பில் உள்ள வன்னெஞ்சமும் வஞ்சகமும் படைத்த பிரதமர் வாஜ்பேயி வெட்கமோ விவேகமோ மானமோ இன்றி வெளிப்படையாகவே கூறிவிட்டார்.

பாக்கிஸ்தான் இராணுவ ஆட்சியாளருடன் காஷ்மீர் சிக்கல் பற்றிப் பேசிட முடியாது என்று முதலில் சொன்ன அவர், 'பாக்கிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீரை விட்டு (PoK) பாக்கிஸ்தான் வெளியேறினால் தான் இந்தியா பேச்சு வார்த்தைக்கு வரும்' என் வெளிப்படையாகவே கூறுகிறார். அகண்ட பாரதம் அமைக்க முதலாவது தப்படி இது.

ஜம்மு - காஷ்மீர் இந்தியாவோடு இணைக்கப்பட்ட போதே பாக்கிஸ்தானியரால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி அது. அதை விட்டு பாக்கிஸ்தானியர் வெளியேற வேண்டும் என்று கூறும் இந்திய அரசு, ஜம்மு - காஷ்மீரை விட்டு வெளியேற வேண்டாமா?

'பாக்கிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர்' ஒரு தனிச் சுதந்தர நாடு போல் இல்லா விட்டாலும் அதற்கென்று தனி ஒரு நாடாளுமன்றம் உண்டு; பிரதமர் உண்டு; குடி அரசுத் தலைவர் உண்டு. ஆனாலும் பாக்கிஸ்தான் அரசின் ஆளுகைக்கு அது உட்பட்டது.

பெயரளவுக்கு இந்தத் தன்மையில் பாக்கிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் **(PoK)** பெற்றுள்ள உரிமைகளைக் கூட, இந்திய அரசு, ஜம்மு - காஷ்மீருக்கு வழங்காதது ஏன்? அப்படி வழங்காததோடு பாக்கிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீரையும் தரக்கோருவது, இந்தியா - பாக்கிஸ்தான் தகராறுகளை மேலும் மேலும் நீட்டித்து வலுப்படுத்தி, இன்னும் 50 ஆண்டுகளுக்கு பாக்கிஸ்தான் - இந்தியா பகையை வளர்க்க மட்டுமே பயன்பட முடியும். இந்நிலையில் காஷ்மீர் சிக்கல் தீர வழி என்ன?

ஒன்று: ஜம்மு - காஷ்மீர் மக்கள் தங்களுக்கு விடுதலை வேண்டுமா, இந்தியாவோடு இணைந்திருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கிற பொறுப்பை அவர்களிடமே விட்டுவிட வேண்டும். அம்மக்கள் பொதுக்கருத்து வாக்கெடுப்பு நடத்தி அதைத்தீர்மானிக்க இந்திய அரசே வழி விட வேண்டும்.

இரண்டு: இதற்கு முதற்படியாக இந்திய அரசு ஜம்மு - காஷ்மீர் அரசியல் சட்டத்தை முழுமையாகவும் உடனடியாகவும் அங்கு அமுல் படுத்த முன்வர வேண்டும்.

இதை விடுத்து உலக அடியாளான அமெரிக்காவின் மற்றும் மழைய காலனிகள் ஒடுக்குமுறைக்குப் பெயர் போன பிரிட்டனின் செல்வாக்கைத் தேடிப் பெற்றுக் கொண்டு காஷ்மீர் சிக்கலுக்குத் தீர்வுகாண முயலுவதை இந்தியா செய்தாலும், பாக்கிஸ்தான் செய்தாலும் அது ஒரு பெரிய ஏமாற்றே ஆகும்.

காங்கிரசை விட, ஜனதாவை விட, இந்த ஏமாற்று வேலையைத் திட்டுமிட்டுச் செய்வது பாரதிய சனதா தலைமையிலான அரசு. இந்த அரசோ, இதற்கு மாற்றாக இந்திய தேசிய காங்கிரசு அரசோ இனியும் தொடர்ந்து இங்கு ஆட்சிக்கு வருவது காஷ்மீர் சிக்கலுக்குத் தீர்வு வர உதவாது. இது உறுதி.

இந்த இரண்டு கட்சிகளின் ஆதிக்கமும் ஆட்சியும் ஒழிக்கப் பட்டு, தேசிய இனவழி விடுதலைக் கொள்கையில் பற்றுக் கோடு உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் அணி செல்வாக்குப் பெறும் போதுதான், காஷ்மீர் சிக்கல் தீர்வு பெறும். அதுவரையில் இதில் இன்றுள்ள நிலையில் ஓர் அங்குல அளவு கூட மாற்றம் வராது.

**-. வே. ஆனைமுத்து**

படிப்பகம்

www.padippakam.com



# வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழாக்கள்

## இரமேஷ் - சுனிதா மகேஸ்வரி

வேலூர் பெரியார் பெருந்தொண்டர் வெ. முனிரத்தினம் - முனியம்மாள் மகன் இரமேஷ்; காட்பாடி எம்.ஜி.ஆர். நகர், செல்வமணி - இராணி மகள் சுனிதா மகேஸ்வரி ஆகியோரின் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழா, 9.4.2000 ஞாயிறு காலை 7.30 மணிக்கு வேலூர் சாரதாம் பாள் சீனிவாசன் திருமணக் கூடத்தில் வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. மு. சுகுமார் வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் மு. நாகநாதன், எம்.எச். கலீல், ந. சுப்பிரமணி, இரா. செந்தாமரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மு. மாதவி நன்றி நவில விழா இனிதே முடிவடைந்தது.

## அ. அன்புமணி - ஏ. அனுசுயா

உளுந்தூர்ப்பேட்டை மறைந்த அருணாச லம் - கண்ணாமணி மகன் அன்பு மணிக்கும், புதுவை ஏழுமலை - வளர்மதி மகள் அனுசுயா வுக்கும் வாழ்க்கை ஒப்பந்த விழா சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பொற்கோ தலைமையில் 9.4.2000 காலை 7.30 மணிக்கு உளுந்தூர்ப் பேட்டை அன்பு திருமணக் கூடத் தில் நடைபெற்றது.

## அன்பழகன் - மகேஸ்வரி

கல்லூரி விரிவுரையாளர் கோ. அன்பழகன் - வருவாய் கோட்ட அதிகாரி ப. மகேஸ்வரி ஆகியோரின் வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா, 9.4.2000 காலை 7.30 மணிக்கு, சிதம்பரம் தனலட்சுமி அம்மாள் திருமண மண்டபத்தில் தமிழ் முறைப்படி இனிதே நடைபெற்றது.

## ஆ. தியாகராசன் - லா.கோ. வித்யா

காஞ்சி நகர மா.பெ.பொ.க. ஆர்வலர் ஆ. தியாகராசன், லா.கோ. வித்யா இவர்களின் வாழ்க்கை ஒப்பந்தவிழா 16-4-2000 ஞாயிறு காலை 8 மணிக்கு காஞ்சிபுரம் வசந்த லட்சுமி கல்யாண மண்டபத்தில் டாக்டர் விமுனாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. சி.நடராசன், க. கோதண்டம், அ.பொய்யாமொழி, கணேசன், மா.செ. தமிழ்மணி, வாலாசா வல்லவன் ஆகி யோர் வாழ்த்துரை வழங்கினர். ஆ. சோதி நன்றி நவில விழா இனிதே முடிவடைந்தது. திரும ணத்திற்கு வந்திருந்த அனைவர்க்கும் திருக்குறள் புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## மஞ்சள் நீராட்டு விழா

சிறுகடம்பூர் இராம கலியமூர்த்தி - செல் வாம்பாள் ஆகியோரின் மகள் அழகம்மாள் அவர்களுக்கு 9.4.2000 ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 3 மணிக்கு மஞ்சள் நீராட்டு விழா நடைபெற்றது.

## அரக்கோணத்தில் 'கலப்பு மணம்' மாத இதழ் வெளியீட்டு விழா

அரக்கோணத்தில் கல்ப்பு மணத் தம்பதி யர் நலச் சங்கத்தின் சார்பில் 'கலப்பு மணம்' மாத இதழ் வெளியீட்டு விழா 2.4.2000 அன்று நடைபெற்றது. டாக்டர் டி.சுகுமார் தலைமை தாங்கினார். சித்தரவேள் வரவேற்புரை ஆற்றி னார். வனரோஜா, தேன்மொழி காந்தி நாதன், வழக்கறிஞர் அருண்குமார், செ.சண்முகம், கன்னோஜிராவ், கோ.பார்த்தசாரதி, கோபி கிருஷ்ணன், சதீஷ், ஏ. தீனதயாளன் ஆகி யோர் உரையாற்றினர்.

'கலப்பு மணம்' மாத இதழைப் புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் மாநில அமைப்பாளர் கவிஞர் தமிழேந்தி வெளியிட, டாக்டர் சுகுமார் பெற்றுக் கொண்டார். சங்கத் தின் மாநிலத் தலைவர் பா.சாரதி சிறப்புரை ஆற்றினார். இறுதியில் பி.சேகர் நன்றி கூறி னார்.

படிப்பகம்

www.padippakam.com



# அனைவர்க்கும் கட்டாயக் கல்வி கொடு!
# அனைத்துத் துறைக் கல்வியும் தமிழில் கொடு!
# தமிழ்வழியில் கற்றோர்க்கு வேலையில் முன்னுரிமை கொடு!
# வேளாண் கூலிகளுக்குச் சொந்தமாக நிலம் கொடு!

## எனக்கோரி, மா.பெ.பொ.க. குழுவினர், தமிழகம் தழுவிய கொள்கை விளக்கப் பயணம்

| மாவட்டம் | பயணநாள் | கூட்டம் நடைபெறும் ஊர்கள் |
|---|---|---|
| திருவள்ளூர் | மே 7 | அம்பத்தூர் பகுதி |
| காஞ்சிபுரம் | 8, 9 | 8. தாம்பரம்<br>9. காஞ்சிபுரம் |
| வேலூர் | 10, 11, 12, 13 | 10. அரக்கோணம்<br>11. சோளிங்கபுரம்<br>12. வேலூர்<br>13. குடியேற்றம் |
| திருவண்ணாமலை | 14, 15 | 14. திருவண்ணாமலை<br>15. செங்கம் |
| சேலம் | 16 | 16. அம்மாப்பேட்டை |
| ஈரோடு | 17 | 17. ஈரோடு |
| விழுப்புரம் | 18 | 18. விழுப்புரம் |
| கடலூர் | 19, 20 | 19. சிதம்பரம்<br>20. காட்டுமன்னார் கோயில் |
| நாகை | 21, 22 | 21. மயிலாடுதுறை<br>22. நாகப்பட்டினம் |
| திருவாரூர் | 23, 24 | 23. வேதாரண்யம்<br>24. கும்பகோணம் |
| திருச்சி | 25 | 25. திருச்சி நகரம் உறையூர் |
| அரியலூர் - பெரம்பலூர் | 26, 27, 28 | 26. மருதூர்<br>27. புதுக்குடி<br>28 செந்துறை |
| சென்னை | 29, 30 | 29 அண்ணா நகர்<br>30. திருவல்லிக்கேணி |

- பயணக்குழுவினர் ஒலிபெருக்கி பொருத்திய பயண எந்தில் (வேன்) சென்னையிலிருந்து மே 6 அன்று பயணத்தைத் தொடங்குவர்.
- பயண உந்து ஒருநாள் வாடகைக்கும் மற்றும் ஒலிபெருக்கிக்கும் ரூ.1000 கட்டணம் தர வேண்டும்.
- பயணத்தின் போது நாள்தோறும் முற்பகலில் 2 ஊர்களிலும், பிற்பகலிலும் 3 ஊர்களிலும் தெருமுனை விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பெறும். இதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.
- நாள்தோறும், பயணத்திட்டத்தில் குறிப்பிட்டவாறு, அந்தந்த ஊரில் பொதுக்கூட்டம் நடத்தப்பட மா.பெ.பொ.க. தோழர்கள் ஆவன செய்ய வேண்டும்.
- தெருமுனைக் கூட்டங்களிலும், மாலைப் பொதுக் கூட்டங்களிலும் மா.பெ.பொ.க. தோழர்களும், தோழமைக் கட்சிகளின் தோழர்களும் அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி, மேதை டாக்டர் அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழாக்கள் ஏன் என்பதையும் விளக்கியும்; மா.பெ.பொ.க.வின் கோரிக்கைகளை வலியுறுத்தியும் உரையாற்றுவர்.

*1.5.2000*

**வே. ஆனைமுத்து**
அமைப்புச் செயலாளர்
மா.பெ.பொ.க

படிப்பகம்

www.padippakam.com



# தமிழக அரசுக்கும் இந்திய நடுவணரசுக்கும் செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாட்டு

## வினைக் குழுவினரின் வேண்டுரையும் தீர்மானமும்

செந்தமிழ்ச் சிலப்பதிகார உலகளாவிய மாநாடு மலேசியத் தலைநகரமான கோலாலம்பூரில் மொழியியல் மேம்பாட்டு நூல் வெளியீட்டுக் கழக (Dewan Bahasa dan pustaka) அரங்கில் 12.12.1999 இல் நிகழ்ந்த போது, கீழ்க்காணும் வேண்டுரையும் தீர்மானமும் பேராளர்களால் முன்மொழிந்து பின் வழிமொழியப்பட்டுத் தமிழகம் மற்றும் இந்திய நடுவணரசின் பார்வைக்கு முன் வைக்கப்படுகின்றன.

புத்தரின் பிறந்த இடம், நேப்பாலில் உள்ளதென அகழ்வாராய்ச்சி மூலம் ஆய்வாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. புத்தமத நூல்களில், இந்திய எல்லைக்கருகில் 'லும்பினி' என்ற இடமே புத்தர் பிறந்த இடமாகச் சொல்லப்படுகின்றது. கடந்த 26 நூற்றாண்டுக் காலமாகவே புத்த மதத்தினர் ஆராய்ந்து இதனை வெளிப்படுத்தியுள்ளனர். இந்த ஆய்வின் கண்டுபிடிப்பு கடந்த 1996 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அகழ்வாராய்ச்சி வல்லுநர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புத்தர், கிறித்து பிறப்பதற்கு முன் 560 - 480க்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் வாழ்ந்ததாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. *(சான்று: 26.5.1997 இல் Time என்ற ஆங்கில மாதிகையில் வெளியானது)*

எகிப்தியப் பேரரசி கிலியோ பாட்ரா வாழ்ந்து வந்த அரண்மனை அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மத்தியத் தரைக் கடலினுள் நடத்தப்பட்ட கடல் அகழ்வாராய்ச்சி வாயிலாக, 2000 ஆண்டுகளுக்கு முன் அப்பேரரசின் நகரமான ''அலெக்சேன்றிய நகரம்'' கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அவள் எகிப்திய நாட்டை கி.மு. 323 - வாக்கில் அரசாட்சி புரிந்ததாக வரலாறு கூறுகின்றது. கடல் அகழ்வாராய்ச்சியாளர் Franck Goddio என்பவர் தமது இணை ஆய்வுக் குழுவினருடன் இதனைக் கண்டு பிடித்து வெளிப்படுத்தியுள்ளார். *(சான்று: The Hindu என்ற ஏடு - ஜூன் 26, 1999)*

இந்தியாவிலும் கடல் அகழ்வாராய்ச்சி வாயிலாக கிருட்டிணன் என்ற இந்துமத தெய்வம் பிறந்ததாகக் கூறப்படும் ''துவாரகை'' என்ற புனித நகரம் அராபியக் கடலில் மூழ்கி இருப்பதாக 1980 இல் நடைபெற்ற ஆய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டது. இவ்வாய்வினை வெற்றிகரமாக கடல் அகழ்வாராய்ச்சி நடுவணம் (Marine Archaeology Centre, The National Institute of Oceanography) செய்து முடித்துள்ளது என அறிகிறோம்.

பழஞ்சிறப்பு வாய்ந்த பூம்புகார் கடற்கரைப் பட்டினத்தின் நிலைமை யாது? சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ் இலக்கியத்தில் தமிழர் நாகரிகம், கலைகள், பண்பாட்டு இயல், அரசியல், வணிகம் மற்றும் தமிழர் அறிவுக் கோட்பாட்டில் முகிழ்த்த கட்டட, நகர் அமைப்பு முறைகளைக் காண்கிறோம். 1960இல் இந்தியாவின் அகழ்வாராய்ச்சித் துறை ஒரு சில கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்திய பின்னர் 1981 இல் கடல் அகழ்வாராய்ச்சி தேசிய நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் எஸ்.ஆர்.ராவ் என்பவரின் தலைமையில் பூம்புகாரைப் பற்றிய ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளதாக அறிகிறோம். அவர் மூலம் மேற்கொண்டு தீவிர ஆராய்ச்சிக்கு முன்மொழிவுகள் வழங்கப்பட்டதாகவும் அறிகிறோம். தமிழக அரசும் பூம்புகாரின் முதல் கட்ட அகழ்வாய்வுப் பணிக்கு 1991 இல் 10 இலக்கம் உருபாய் ஒதுக்கியும், 1993 இல் 2வது கட்ட அகழ்வாய்வுக்கு மேலும் 10 இலக்கம் உருபாய் ஒதுக்கி இருப்பதையும் தமிழ் மாநில அகழ்வாராய்ச்சித் துறை வெளிப்படுத்தியுள்ள செய்தியின் மூலம் அறிகிறோம். தமிழக அரசு மேற்கொண்டு வரும் பூம்புகாரின் இத்தகைய அகழ்வாராய்ச்சிப் பணிகளை மாநாட்டு வினைக் குழுவினர் உலகத் தமிழர்களின் சார்பாக மனமுவந்து பாராட்டுவதுடன் மேற்கொண்டு கடலுக்குள் மூழ்கிக் கிடக்கும் பூம்புகாரின் சிறப்புத் தன்மையை அகழ்வாய்வு செய்து தமிழரின் பெருமையை உலகிற்கு உணர்த்த தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசினையும் இந்திய நடுவண் அரசினையும் இத்தீர்மானம் மூலமாக வேண்டுகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

# சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - ஏப்பிரல் 2000

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| K.M. சுப்பிரமணியம் | [illegible] | [illegible] |
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| துரை. மடங்கன் | [illegible] | [illegible] |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 30.00 |
| இரா. பத்மநாபன் | ,, | 25.00 |
| ப.இளங்கோவன் | ,, | 25.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | ,, | 20.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | ,, | 10.00 |
| முத்து அ. அறிவுக்கடல் | ,, | 10.00 |
| பால்வண்ணன் | வடக்குமாங்குடி | 10.00 |
| க.முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| கி.கலை | ,, | 50.00 |
| க.குப்புசாமி | ,, | 50.00 |
| ஜெ.அய்.ஏ.காந்தி | எரும்பி | 10.00 |
| [illegible] | [illegible] | 10.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| நா.பா. செந்தமிழ்க்கோ | வேலூர் | 50.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| லோ.ரெ.குமார் | சென்னை | 200.00 |
| ந.அப்துல் ரகுமான் | ,, | 100.00 |
| [illegible] | [illegible] | [illegible] |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| கி.விடுதலை | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |
| அப்துல் ரகுமான் | ,, | 100.00 |

## வளர்ச்சி நிதி ரூ.3000

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் விழுப்புரம் மாவட்டச் செயலாளர் தோழர் க. திருப்பாண்டியன், 18.4.2000 அன்று, 'சிந்தனையாளன்' வளர்ச்சி நிதியாக ரூ.3,000/- (மூவாயிரம்), தோழர் சீர்காழி மா.முத்துச்சாமியிடம் அளித்தார். நன்றி.

- ஆசிரியர் குழு

## மூலிகை மருத்துவம்

### நீங்களும் மருத்துவராகலாம்!

**குமரி (அ) சோற்றுக் கற்றாழை**



குமரியின் தோல் நீக்கிய சோற்றை ஏழு முறை கழுவி கசப்பு நீக்கிக் குழம்பாகச் சமைப்பதுண்டு. இதை உண்பதால் தாது வெப்பு அகன்று தாகந் தணியும்.

1. ஒரு கிலோ விளக்கெண்ணெய், 1 கிலோ 10 முறை கழுவிய சோற்றுக் கற்றாழைச் சோறு, அரைக் கிலோ பனங்கற்கண்டு, அரைக் கிலோ வெள்ளை வெங்காயச்சாறு ஆகியவற்றைக் கலந்து நீர் சுண்டக் காய்ச்சி (குமரியெண்ணெய்) காலை மாலை 15 மி.லி. கொடுக்க மந்தம், வயிற்றுவலி, ரணம், குன்மக்கட்டி, பசியின்மை, புளியேப்பம், பொருமல் ஆகியவை தீரும். காலை மாலை 1 தேக்கரண்டி (5 மி.லி) கொடுத்து, காரம், புளி நீக்கி உணவு கொள்ள மேக நோய் பலவீனம், எரிச்சல், நீர்க்கசியும் கிரந்தி, அரிப்பு, தினவு, மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்களில் நீர் போதல், தாது இழப்பு, அரையாப்பு, தொடைக்கட்டி, உறுப்புகளில் அக, புற ரணங்கள், சீழ்வடிதல் தீரும். மலச் சிக்கல் நீங்கி உடல் தேறும்.

- தொகுப்பு: கோ. அருண்மொழி

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து,
19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-5. அச்சுக்கோப்பு: என்.ஏ.எம். பிராசஸ், சென்னை-18
அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: 852 28 62

படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No.344
Registrar of Newspapers of India under licence No. 24452/74 'Sinthanaiyalan' TN/Chief PMG/618/2000

# களத்தில் சந்திப்போம்

'தமிழேந்தி'

வேர்ப்புறத்தில் வெந்நீரைப் பாய்ச்சு தல்போல்
விதைக்குள்ளே வெடிமருந்தைப் பூச்சு தல்போல்
தீர்ப்புரைத்து விட்டார்கள், தமிழ்ப் பிள்ளை
செந்தமிழில் கல்விபெற உரிமை இல்லை
ஆர்ப்பரித்து நிற்கிறது, தாயை விற்றும்
ஆயாசத் தொழில்நடத்தும் வணிகக் கூட்டம்
போர்ப்பரணி பாடித்தான் எழடா தோழா
புல்லர்களின் பொல்லாங்கு பொசுங்க வேண்டும்

எரிகிறது நெஞ்சில்தீ! என்கு ழந்தை
என்நாட்டில் என்மொழியில் கல்வி கற்கும்
உரிமையினை மறுத்திங்கே தீர்ப்பு ரைக்கும்
உளத்துணிவை எவன்கொடுத்தான்? தமிழ னெல்லாம்
மரக்கட்டை யாகத்தான் மாறிட்டானா?
மானம்வெட்கம் எல்லாம் இழந்திட்டானா?
வரிப்புலியாய் பாய்ந்தேநீ எழடா தோழா
வஞ்சகரின் பொய்வலையை அறுக்க வேண்டும்.

இந்திமொழிக் கெதிராக ஆங்கி லத்திற்(கு)
இடங்கொடுத்த தவறான அரசி யல்தான்
செந்தமிழுக் கிடமின்றிச் செய்த தின்று
செக்குமாட்டு அன்பழகன் மாறன் எல்லாம்
எந்தவகைத் தமிழன்கள்? வாக்குச் சீட்டு
எடுபிடிகள் ஏன்களத்தில் இறங்க வில்லை?
பந்தயத்துக் குதிரையென எழடா தோழா
பழிசெய்யும் துரோகிகளைத் துரத்த வேண்டும்

எங்கெங்கும் தாய்மொழியில் எல்லாம் கற்றே
ஏற்றத்தின் உச்சிக்கே போய்விட் டார்கள்
இங்குமட்டும் படிப்பாளி, பதவிக் காரன்
'இங்கிலீஷி'ன் பெருமையினைத் திணம்பி தற்றித்
தங்கமெனும் தமிழ்மதலைப் பூந்தோட் டத்தில்
தணல்நெருப்பை அள்ளிவைத்துக் கொல்கின் றானே!
செங்களத்தில் சந்திப்போம் வாடா தோழா
செத்துமடிந் தேனும்நம் தமிழை மீட்போம்.

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்